பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு2029 மாசி 25 திங்கட்கிழமை (09–03–1998) UTHAYAN– A Lively National Tamil Daily கதிர்:90

பொது சனநூலகம் 10 MAR 1998 மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

வட்டுக்கோட்டையில் புலிகளுடன் மோதல்

யாழப்பாணம், மார்ச் 9

வட்டுக்கோட்டையில் நேற்று முன்தினம் மாலை 7.25 மணியளவில் ரோந்து சென்ற படையினருக்கும் விடுதலைப் புலிகளின் ஒரு சிறு குழுவுக்கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றதாக பலாலி இராணுவ தலைமையக செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

மூன்று உறுப்பினர் கொண்ட விடுதலைப் புலிகளின் குழுவுடன் இடம் பெற்ற மோதலில் ஒரு புலி உறுப்பினர் உயிரிழந்தார் என்றும் —

பின்னர் அப்பகுதியில் படையினர் மேற்கொண்ட தேடுதலில் உயிரிழந்த புலி உறுப்பினர் ஒருவரின் சடலம், ரி 56 ரகத் துப்பாக்கி இரண்டு, ரி 56 ரக துப்பாக்கி மகளின்கள் இரண்டு, இரு மின்சார டெற்றேர்கள், ஒரு சயனைட் வில்லை ஆகியன கைப்பற்றப்பட்டன என்றும் — அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

(இ–3)

யுத்தத்துக்கு வெகு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும்!

ஜனாதிபதி நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 9

அரசு முன்வைத்துள்ளஅரசமைப்பு திருத்தங்களுக்கு எதிர்க்கட்சியான ஐ. தே. கட்சியின் ஆதரவு நாடாளுமன்றத்தில் கிடைக்காவிட்டால் வேறு வழிகளிலாவது அரசமைப்பு சீர் திருத்தங்களை அமுல் செய்தே திருவோம். யுத்தத்துக்கு விரைவில் முற்றுப் புள்ளி வைக்கப்படும்.

இப்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

சர்வதேச மகளிர்தினத்தை முன்னிட்டு கொழும்பு. நவரங்ககலா மண்டபத்தில் உரையாற்றும் போதேஅவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:–

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதன் மூலமே ஐக்கியமான தேசத்தைக் கட்டியெழுப்பமுடியும். சிறுபான்மைச் சமூகத்தினர் நம்பிக்கையுடனும், சுயமரியாதையுடனும் வாழக்கூடிய அரசியல் சமூக சமாதான அமைப்பு முறைகள் உருவாக்கப்பட வேண்டும். இதற்காகவே அரசமைப்பு சீர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

குடாநாட்டில் நேற்று மோதல் சம்பவங்கள்!

சேதங்கள்குறித்து தகவல் இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 9

குடாநாட்டில் நேற்று சில இடங்களில் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன என்று தெரிவிக்கப்பட்டது.

கச்சாய், குடந்தனை, குருநகர் பகுதிகளிலேயே இந்த மோதல்கள் இடம்பெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

தென்மராட்சியில் கொடிகாமத்தை அடுத்து கச்சாய்ப் பகுதியில் ரோந்து சென்ற

(10 ஆம் பக்கம் பார்க்க)

படையினர் தேடுதல்

யாழ்ப்பாணம், மார்ச் 9

கிளிநொச்சிப் பகுதியில் படையினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட தேடுதலில் ரி–56 எல். எம். ஜி. துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ–3)

நீதிமன்ற உத்தரவால் இ. தொ. கா. மாநாடு நேற்று நடை பெறவில்லை

கொழும்பு, மார்ச். 9

கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நேற்று நடைபெற இருந்த இலங்கை தொழிலாளர்காங்கிரஸின் 32ஆவது தேசிய மாநாடு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் தடைகாரணமாக நடைபெறவில்லை.

இ,தொ.காவின் முன்னாள் செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி கொடுத்த மனுவை அடுத்தே இந்த மாநாடு நடந்தப்படக் கூடாது என மாவட்ட நீதிமன்றம், இடைக்காலதடை உத்தரவைப் பிறப்பித்திருந்தது.

இதனாலேயேஇந்தமாநாடு நேற்று ரத்துச் செய்யப்பட்டது

(இ-9)

முச்சந்திமுரசு

பணத்தை மட்டும் அல்ல படையினரையும் தான் பாருங்கோ.....!

பல கோடி ரூபாவை ஏப்பமிடும் வெற்றி உறுதி

வவுனியா, மார்ச். 9

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கைக்கு இது வரை 432 கோடியே 4½லட்சம் ரூபாவை ஸ்ரீலங்கா அரசு செலவிட்டது.

நாளொன்றுக்கு 14 லட்சம் ரூபா வீதம் 296 நாள்களுக்கு இந்த தொகை செலவிடப்பட்டுள்ளது.

இது தவிர இழக்கப்பட்ட படைத்தளப் பெறுமதி 100 கோடி ரூபாவுக்கும் அதிகம்.

போரின் முதல் நான்கு மாதங்களில் மட்டும் பலகோடி பெறுமதியான ஆயுத தளபாடங்கள் இழக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

(இ–3)

குண்டு வெடிப்புக்களால் உல்லாசப்பயணம் வீழ்ச்சி

கொழும்பு, மார்ச். 9

கொழும்புக்கு உல்லாசப்பயணம் செய்வது மிகவும் ஆபத்தான விடயம் என்ற கருத்து வெளிநாடுகளில் அதிகளவில் பரவியிருப்பதால் இலங்கைக்கு வருகை தருகின்ற உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து வருவதாக வெளி நாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

இதனால் அன்னியச் செலாவணியும் பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(இ–9)

ஜெயலலிதா நேற்று டில்லி பயணமானார்

சென்னை, மார்ச் 9

தமிழக முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர்களைச் சந்தித்து பேச்சு நடத்துவதற்காக நேற்று புதுடில்லி சென்றுள்ளார்.

பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சி அமைக்கும் பட்சத்தில் அக் கட்சிக்கு வெளியில் இருந்து ஆதரவு வழங்குவது தொடர்பாகவும் வேறும் பல முக்கிய விடயங்கள் தொடர்பாகவும் அவர் இன்று பேச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். நகருக்கான குடிதண்ணீர் திட்டம் துரிதமாக அமுலாகும்

யாழ்ப்பாணம், மார்ச். 9

யாழ். நகர குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க கோண்டாவிலில் இருந்து நகரத்துக்கு குடிதண்ணீர் எடுத்து வரும் திட்டத்தை துரிதமாக மேற்கொள்ளுமாறு யாழ். மாநகர மேயராக பதவி ஏற்க இருக்கும் திருமதி சறோஜினிதேவி யோகேஸ்வரன் கேட்டுள்ளார்.

நேற்று தம்மைச் சந்தித்த ஜேர்மன் தொழில் நுட்பக் கூட்டுத்தாபன அதிகாரிகளிடமே அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.

கோண்டாவிலில் இருந்து நிலத்தின் கீழான பாரிய குழாய்கள் மூலம் குடிதண்ணீர் எடுத்து வரப்பட்டு யாழ். நகரில் உள்ள நீர்த் தாங்கியில் சேகரித்து பொது மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தை துரிதமாக மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

யாழ். நகர மக்களின் குடிதண்ணீர் பிரச்சினைக்குதீர்வு காண ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

யாழ். மாநகர ஆணையாளர் வி. பி. பாலசிங்கமும் இதில் பங்கு பற்றினார்.

(இ–3)

புலிகளுக்கு எதிராக ஜேர்மனி நடவடிக்கைஎடுக்க முடியாது

ஜேர்மன் எம்.பி. தகவல்

வவுனியா, மார்ச் 9

''ஜேர்மனியில் உள்ள விடுதலைப் புலிகளுக்கு எதிராக எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கமுடியாது.''

இப்படி கொழும்பு வந்த ஜேர்மன் நாடாளுமன்றக் குழுத் தலைவர் போல் பிராங் ஹரி தெரிவித்தார்.

ஜேர்மனியில் விடுதலைப் புலிகள் நிதி சேகரிப்பதைத் தடைசெய்யவேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசு கோரிய போது இந்தப் பதில் வழங்கப்பட்டது.

''ஜேர்மனியில் விடுதலைப் புலிகள் எந்த வன்முறையிலும் ஈடுபடாததால், அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்க முடியாது அங்கு 50 ஆயிரம் தமிழர்கள் வசிக்கிறார்கள்'' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(இ–3)

மின்மாற்றி சேதம்

வவுனியா. மார்ச். 9

மட்டக்களப்பில் மின் மாற்றி இனந்தெரியாதோரால் துப்பாக்கியால் சுடப்பட்டு சேதமாக்கப்பட்டது.

மட்டக்களப்பு ஓட்டமாவடி இறந்துறை சேனையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

(இ–3)

பாதுகாப்பு புனரமைப்பு கூட்டம்

கொழும்பு, மார்ச் 9

யாழ். மாவட்டப் பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு பணிகள் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று எதிர்வரும் 20 ஆம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்டத்தில்

பாதிக்கப்பட்ட மீனவக்குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குமாறு பணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள 8 ஆயிரத்து 500 மீனவக் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபைக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் கடல் வலய பாதுகாப்புச் சட்டம் காரணமாக மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும்—

அவர்கள் வாழ்க்கையை நடத்த நிவாரணம் வழங்க வேண்டும் என்றும்—ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் கேட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து பாதுகாப்பு காரணங்களுக்காக கடல்வலயப் பாதுகாப்பு சட்டத்தை நீக்க முடியாதுள்ளதால், 'மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபையைப் பணித்துள்ளார்.

(இ-3)

இறுதி ஆட்டங்களும் பரிசளிப்பு வைபவமும்

யாழ்ப்பாணம், மார்ச் 9

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) செஞ்சேனைத் தளபதி தாஸின் 12 ஆவது நினைவுக்கிண்ணத்துக்கான கரபந்தாட்ட, கிரிக்கெட் போட்டிகளின் இறுதி ஆட்டங்களும், பரிசளிப்பு வைபவமும் நாளை மறுதினம் பிற்பகல் 2. 30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற விருக்கின்றன.

ரெலோ அமைப்பு முதல்வர் எம்.கே. சிவாஜிலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

வடக்கு – கிழக்கு மாகாண சபையின் முன்னாள் போக்குவரத்துதொழிற்றுறைஅமைச்சர் எம். கே. அபுபூசுப்பும் இதில் பங்குபற்றுவார்.

(இ–3)

யாழ். பாடசாலைகளை புனரமைக்க ரூ. 5 கோடி

ஒதுக்க ஜனாதிபதி பணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ். மாவட்டப் பாடசாலைகளைப் புனரமைக்க 5 கோடி ரூபாவை வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிதிச் சபைத் தலைவரைக் கேட்டுள்ளார்.

வடக்கு — கிழக்கு மாகாண சபைக்கு இவ்வாண்டு கல்வித் துறைக்கு ஒதுக்கியுள்ள 10 கோடி ரூபாவில் 5 கோடி ரூபாவை யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்குமாறும் —

மீதியை ஏனைய மாவட்டங்களுக்கு ஒதுக்குமாறும் — ஜனாதிபதி நிதிச் சபைத் தலைவர் அசோகா குணவர்த்தனாவைக் கேட்டுள்ளார்.

இது தொடர்பான பணிப்புரையை ஜனாதிபதி வடக்கு — கிழக்கு ஆளுநருக்கு அனுப்பியுள்ளார்.

கடந்தகால யுத்தம் காரணமாக யாழ். மாவட்டப் பாடசாலைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் —

அவற்றைப் புனரமைக்கக் கூடுதல் நிதி வழங்க வேண்டுமென்றும் — யாழ். மாவட்ட எம்.பியும், ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியை கேட்டிருந்தார். (இ-3)

புதிய தளபதி கண்டி விஜயம்

கொழும்பு, மார்ச் 9

விமானப்படையின் புதிய தளபதி எயார் மார்ஷல் ஜெயலத் வீரக்கொடி நேற்று கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு விஜயம்செய்து புனித தந்தச் சின்னங்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

அவர் மல்வத்த அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்களைச் சந்தித்து ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டார்.

இந்தச் சந்திப்புக்களின் போது தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரட்ணவும் சமுகமளித்திருந்தார். (இ–9)

மன்னிப்பு சபை கண்டனம்

கொழும்பு, மார்ச் 9

மருதானை குண்டு வெடிப்புச் சம்பவத்தைச் சர்வதேச மன்னிப்புச் சபை கண்டித்துள்ளது.

''பொதுமக்கள் கொல்லப்படுவதற்கும் உடைமைகள் நாசமாவதற்கும் காரணமான இந்தக் குண்டு வெடிப்பை விடுதலைப் புலிகள் மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது. இப்படியான குண்டு வெடிப்புக்கள் பொது மக்களைப் பாதிக்கிறது.''

இப்படி அந்தச் சபை விடுத்துள்ள பகிரங்க அறிக்கையில் தெரிவித்துள்ளது.

(இ-3)

சமய அதிதிகளில்

கொழும்புத்துறை, மார்ச் 9

பொன்னாலை அருள் மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் கடந்த முதலாம் திகதி முதல் இலட்சார்ச்சனை நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் புதன்கிழமை மாசிமக நன்னாளில் காலை 10மணிக்கு இலட்சார்ச்சனை பூர்த்தியும், தீர்த்த உற்சவமும், மாலை 4. 00 மணிக்கு தீபபூசையும் இடம்பெறும்.

இலட்சார்ச்சனை ஆலயப் பிரதம குரு சிவாசார்யமணி இராமபாலச்சந்திரக் குருக்கள் தலைமையில் நடைபெற்று வருகிறது. (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை ஆத்தியம்பதி அருள் மிகு ஸ்ரீ சந்திரசேகரர் விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தின் சப்பறத் திருவிழா இன்று மாலை 6. 00 மணிக்கும், தேர்த்திருவிழா நாளை 10 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 6. 30 மணிக்கும் நடைபெறவுள்ளன.

வசந்தமண்டபப் பூசையை தொடர்ந்து காலை 7. 30 மணிக்கு பெருமான் தேரில் ஆராகனிப்பார். மறுநாள் காலை 8. 30 மணிக்கு தீர்த்தத்திருவிழா இடம்பெறும்.

ஆலயப்பிரதம குரு பிரம்ம ஸ்ரீ க. மு. ஜெகராதக் குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெறும். (ஐ–30)

★ ★ ★

நல்லூர் கோயில் வீதியில் உள்ள அருள் மிகு ஸ்ரீ வாலையம்மன் கோயிலின் வருடாந்த உற்சவ தேர் திருவிழா நாளை செவ்வாய்க் கிழமை காலை நடைபெறும். மறுநாள் புதன் மாசி மகத்தன்று காலை 9-00 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(ஐ–30)

3 மீனவரை காணவில்லை

வவுனியா, மார்ச் 9

பொக்கணைக் கடற்பரப்பில் மீன் பிடிக்கச் சென்ற மூன்று மீனவர்கள் இன்னும் கரை சேரவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வெள்ளி இரவு மீன் பிடிக்கச் சென்ற செபமாலை ரவீந்திரன் (வயது 25), அந்தோனிப்பிள்ளை யோசெப் செல்வராசா (வயது 42), ஹரிதாசன் டெமிட் (வயது 29) ஆகிய மூவருமே காணாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-164–9)

விளையாட்டு உபகரணம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 9

வலி–வடக்கில் அகதிமுகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஈ. பி. டி. பி. அமைப்பின் வலி-வடக்கு அமைப்பாளர் சிவகுமார் (வேலு) அந்த முகாம்களுக்கு விஜயம் செய்து நேரடியாக அவற்றை வழங்கினார். (இ-3)

மத்திய கல்லூரி மாணவருக்கு தங்கப் பதக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ். மத்திய கல்லூரியில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் கல்விகற்று அகில இலங்கை மட்டத்தில் முதல் இடங்களைப் பெற்ற நான்கு மாணவர்கள் தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட உள்ளனர்.

இந்த நான்கு மாணவர்களுக்கும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி தங்கப் பதக்கங்களை வழங்கி பாராட்டுவார். (இ-9)

மரண அறிவித்தல்கள்

சபாபதிப்பிள்ளை யோகரெத்தினம்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வேலணை மணியகாரன் வீட்டடியை வசிப்பிடமாகவும் கொண்டு கொக்குவில் கிழக்கில் தற்காலிகமாக வசித்தவரான சபாபதிப்பிள்ளை யோகரெத்தினம் அவர்கள் 8-3-98 அதிகாலை சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை சின்னத்தங்கச்சி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பையா—இராசம்மா தம்பதிகளின் மருமகனும், யோகவதியின் (ஆசிரியை, வேலணை சேர். வை. துரைசுவாமி ம. ம. வித்தியாலயம்) அன்புக் கணவரும், பிரவீனாவின் (மாணவி, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) பாசமிகு தந்தையாரும், ஜெயராணி, புஸ்பமலர், விஜயலட்சுமி, மகேந்திரராசா (ஜேர்மனி), கமலாம்பிகை (சுவிஸ்) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற அமிர்தலிங்கம் (குடியேற்ற அதிகாரி) மற்றும் திருநீலகண்டம், தங்கரெத்தினம், திலகவதி, மனோன்மணி (பிரான்ஸ்), நாகரெத்தினம் (கனடா), இராசலிங்கம் (சிரேஸ்ட விவசாய போதனாசிரியர்), சுந்தரலிங்கம் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், வேலணை), திருநாவுக்கரசு, இராஜகுலநாயகி (ஜேர்மனி), தனபாலசிங்கம் (சுவிஸ்), ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 9-3-1998 திங்கள் காலை 10 மணிக்கு இல:49, புகையிரத நிலைய வீதி, கொக்குவில் கிழக்கில் நடைபெறும்.

தகவல்:
சு. சுந்தரலிங்கம்
(R. D. O. வேலணை)

49, புகையிரத நிலைய வீதி,
(ஆடியபாதம் வீதி,)
கொக்குவில் கிழக்கு. (53937)

தீருமதி

இலட்சுமி-சங்கரப்பிள்ளை

வசாவிளான் தெற்கினை சொந்த இடமாகவும், சண்டிலிப்பாய் வடக்கு இரட்டையர் புலம் வைரவர் கோயிலடியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இலட்சுமி-சங்கரப்பிள்ளை 08-03-98 அன்று காலமானார்.

அன்னார் க. சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 9-3-98 காலை 10-00 மணியளவில் நடைபெறவுள்ளன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
முருகையா-சிறீகரன்(சிறீ)
(பேரன்)
சண்டிலிப்பாய் வடக்கு. (53939)

நெல்லியடி
மஹாத்மா
வெண் திரையில்

இன்று முதல்
நாகர்ஜுன்
சுமிதாசென்
நடித்த
ரட்சகன்
காட்சிகள்: 10-30, 2-30
(பழைய நேரம்)
(சி/2756)

லிபேட்டி சினிமா
அச்சுவேலி.
35 அடி அகலத் திரையில்

இன்று முதல்
விஜய் - கஜோல்
ஜெய்சங்கர்
செந்தில், வடிவேலு
நடித்த
சந்திரலேகா
குடும்பச் சித்திரம்
பழைய நேரம்
10-30, 2-30
(53782)

SUNIL ARTS
- சுனில் ஆட்ஸ் -

25 – 02 - 1998 வரை ஒப்படைத்த றோல்களின் படங்கள் 07 – 03 - 1998 அன்று வந்துவிட்டன. படங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:- இதற்கு முன்பு வந்த படங்களையும் பெற்றுக்கொள்ள தவறினால் அதற்கு நாங்கள் பொறுப்பு அல்ல.

றோல்கள் **13-03-1998** அன்று அனுப்பப்படும்.

272, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
(சி/3072)

கூட்டுறவு மகளிர் கல்வி அபிவிருத்திநிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்

முதலாம் பரிசில் இலக்கம்	3949
இரண்டாம் பரிசில் இலக்கம்	10326
மூன்றாம் பரிசில் இலக்கம்	7764

பரிசுகள் 14–3–1998 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு சபையில் வழங்கப்படும்.

மாவட்டச் செயலாளர்,
யா. மா. கூ. சபை.
இல: 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (சி/3070)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் பாரதீய ஜனதாவுக்கு ஆதரவு அளிப்பதாயின்

கருணாநிதியின் ஆட்சியைக் கலைக்குமாறு ஜெயலலிதா முன் நிபந்தனை எதுவும் விதித்தாரா?

சென்னை, மார்ச் 9

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் மு. கருணாநிதியின் தலைமையிலான அரசைக் கலைப்பதாக இருந்தால்தான் பாரதீய ஜனதாக்கட்சி மத்தியில் ஆட்சியமைக்க ஆதரவு அளிக்க முடியும் என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா முன்வைத்த நிபந்தனையை பாரதீய ஜனதா தலைவர்கள் நிராகரித்துவிட்டனர். அதையடுத்து, அதேநிபந்தனையை காங்கிரஸ் தலைவர்களிடம் அவர் முன்வைத்ததாக தெரியவருகிறது. ஆனால் இதற்கு காங்கிரஸ் வட்டாரங்கள் உடனடியாகத் திட்டவட்டமான பதிலெதையும் அளிக்கவில்லை என்று புதுடில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனது ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பாக 13 வழக்குகளில் சிக்கிக் கொண்டிருக்கும் ஜெயலலிதா, தி. மு. க. ஆட்சியில் தொடர்ந்து இருக்குமானால், அவ்வழக்குகளில் இருந்து விடுபட முடியாது என்பதால் கருணாநிதியின் அரசைக்கலைக்க வேண்டுமென்ற நிபந்தனையை துரும்பாகப் பயன்படுத்துவதில் முனைந்து நிற்கிறார்.

பாரதீய ஜனதா மத்தியில் ஆட்சியமைத்தால் தி. மு. க. அரசைக்கலைக்கப் போவதில்லை என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் வெங்கையா நாயுடு திட்டவட்டமாகக் கூறிவிட்டதாகத் தெரியவருகிறது. அத்துடன் பாரதீய ஜனதா தலைமையிலான அரசு அமைய ஆதரவு தருவதானால் தனக்கு துணைப்பிரதமர் பதவியைத்தர வேண்டுமென்று ஜெயலலிதா விடுத்ததாகக் கூறப்படும் கோரிக்கையையும் பாரதீய ஜனதா தலைவர்கள் நிராகரித்து விட்டார்கள்.

பாரதீய ஜனதா ஆட்சிக்கு வந்தால், கருணாநிதி அரசு ஒரு நிமிடம் கூடப்பதவியில் இருக்காது என்று தேர்தல் பிரசார காலத்தில் ஜெயலலிதாவும், அவரது தோழமைக் கட்சிகளும் மேடைக்குமேடை பிரசாரம் செய்து வந்ததால் இது இப்போது ஒரு கௌரவப் பிரச்சினையாகப் போய்விட்டது.

தனது நிபந்தனையைப் பாரதீய ஜனதாத் தலைவர்கள் நிராகரித்ததால் ஆத்திரமடைந்திருக்கும் ஜெயலலிதா காங்கிரஸுக்கு தூது அனுப்பி தி. மு. க. அரசைக் கலைப்பதாக உறுதியளித்தால் தன்வசமிருக்கும் 27 எம். பி. க்களின் ஆதரவை காங்கிரஸுக்கு வழங்கத் தயாராக இருப்பதாக அறிவித்தார். இதற்கு காங்கிரஸ் வட்டாரங்கள் உடனடியாக திட்டவட்டமான பதில் ஏதும் கூறவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. 27 எம். பி. க்களின் ஆதரவைப் பெறுவதற்காக ஜெயலலிதாவின் நிபந்தனையை காங்கிரஸ் ஏற்றுக்கொண்டால், அக்கட்சி ஆட்சியமைக்க ஆதரவளிக்க முன்வரும் 96 எம். பி. க்களைக் கொண்ட ஐக்கிய முன்னணியினால் பிரச்சினை உருவாகும். எனவே ஜெயலலிதாவின் இந்த அரசியல் சதுரங்கம் பலனளிக்கப்போவதில்லை என்று புதுடில்லி அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-10)

கருணாநிதி மறுப்பு

நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழகத்தில் ஆளும் தி. மு. க. கணிசமான அளவு வெற்றியீட்டத் தவறியதற்கு தார்மீகப் பொறுப்பேற்று பதவி விலக வேண்டும் என எதிர்க்கட்சிகள் விடுத்துவரும் கோரிக்கைகளை முதல்வர் கருணாநிதி நிராகரித்துள்ளார்.

இவ்வாறு பதவி துறப்பது தேவையற்றது என்றும், இத்தகைய நடைமுறை கடந்த காலத்தில் பின்பற்றப்படவில்லை என்றும் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இடைத் தேர்தலில் கட்சி தோல்வியுற்றால் முதலமைச்சர் பதவி விலக வேண்டும் என்ற தார்மீகப் பொறுப்பு எதுவும் கிடையாது.

அண்ணாநகர், மயிலாடுதுறை இடைத் தேர்தல்களில் தி. மு. க. முன்னர் வெற்றியீட்டிய போது முதலமைச்சராக இருந்த எம். ஜி. ஆர். பதவி விலகவில்லை. தமிழக மக்கள் தேர்தலில் அளித்துள்ள தீர்ப்பு தி. மு. க. ஆட்சிக்கு எதிரானது அல்ல என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

71 வயதான பிரமச்சாரி மீண்டும் பிரதமராகிறார்!

புதுடில்லி, மார்ச் 9

இந்து தேசிய வாதியான அடல் பிஹாரி வாஜ்பாய் (Atal Behari Vajpayee) இந்தியாவின் புதிய பிரதமராக பதவியில் அமர்வார் என்பதை பெரும்பாலான இந்திய மக்கள் எதிர்பார்ப்பதாக கணிப்புகள் தெரிவிக்கின்றன.

71 வயதான வாஜ்பாய் ஒரு பிரமச்சாரி.

தேர்தலில் பாரதீயஜனதா கூடிய இடங்களை கைப்பற்றியதைத் தொடர்ந்துஇந்தியப்பத்திரிகைகள் முன் பக்கத்தில் வாஜ்பாயின் படங்களை தொடர்ந்து பிரசுரித்துவருகின்றன.

ஒரு டசினுக்கு மேற்பட்ட கூட்டணிக் கட்சிகளினதும் சில சுயேச்சைகளினதும் ஆதரவுடன் பாரதீயஜனதா மத்தியில் ஆட்சி அமைக்கும் என்பது ஓரளவு உறுதியாகி விட்டது.

இரண்டாவது முறையாக பிரதமர் பதவியில் அமரவுள்ள வாஜ்பாய் 1926 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தன்று சாதாரண இந்தியக் குடும்பம் ஒன்றில் பிறந்தார், கம்யூனிஸத்தில் இருந்தும், மகாத்மாகாந்தியின் மிதவாத காங்கிரஸில் இருந்தும் 1940 களில் பிரிந்து சென்ற வலது சாரி இந்து தேசிய வாதிகளில் ஒருவராக வாஜ்பாய் மாறினார். சட்டத்துறை மாணவரான அவர் 1951 ஆம் ஆண்டு அரசியலில் பிவேசித்து பாரதீய ஜனதாக் கட்சி உறுப்பினரானார்.

1970 களில் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி அமுல் செய்த அவசரகாலச் சட்டத்தை எதிர்த்துக்குரல் எழுப்பியதனால் இரண்டு வருடங்கள் அவர் சிறைவாசம் அனுபவித்தார்.

1977 — 80 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பதவியில் இருந்த ஜனதாதள் அரசில் அவருக்கு வெளிவிவகார அமைச்சர் பதவி வழங்கப்பட்டது.

1980 இல் ''ஒரே நாடு, ஒரே மதம், ஒரே கலாசாரம்'' என்ற தத்துவத்தைக் கொண்ட தீவிர மதசார்புக் கட்சியாக பாரதீய ஜனதாக் கட்சி அத்வானியின் தலைமைத்துவத்துடன் உருவெடுத்தது. அதன் பின்னர் வாஜ்பாய் அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றதும் அக்கட்சி தேர்தல்களில் படிப்படியாக பலம் பெற்று வளர்ச்சி கண்டது.

1984 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் இரண்டு ஆசனங்களை மட்டுமே கைப்பற்றிய பாரதீய ஜனதாக் கட்சி 1989 இல் 89 ஆசனங்களையும், 1991 இல் 119 ஆசனங்களையும் பெற்று முன்னணிக்கு வந்தது.

1996 இல் நடந்த பொதுத் தேர்தலில் 162 ஆசனங்களை வென்று கூடிய இடங்களைக் கைப்பற்றிய தனிக் கட்சியாக பரிணமித்தது. அதனையடுத்து மத்தியில் அரசமைக்க அக்கட்சி அழைக்கப்பட்டது. அடல்பிஹாரி வாஜ்பாய் பிரதமரானார். ஆனால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது போனதால் 15 நாள்கள் மட்டுமே பதவியில் நீடித்த அவரது அரசு கவிழ்ந்தது.

தற்போது மீண்டும் ஆட்சி அமைக்க பாரதீய ஜனதாவுக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

பல அபிப்பிராய வாக்கெடுப்புக்களில் நாட்டில் பரவலான செல்வாக்கு மிக்க தலைவராக அடையாளம் காணப்பட்ட வாஜ்பாய் நாட்டின் தலைமைப் பொறுப்பை வகிக்கப் பொருத்தமானவர் எனக் கருதப்படுகிறார்.

(ஐ)

பாரதீய ஜனதாவின் கருத்துக்களால் பாகிஸ்தான் சீற்றம்!

இஸ்லாமாபாத், மார்ச் 9

இந்தியாவில் புதிய அரசமைக்கும் என எதிர்பார்க்கப்படும் பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர்கள் சிலர் தெரிவித்து வரும் கருத்துக்ஓகள் பாகிஸ்தானை சீற்றமடைய வைத்துள்ளன.

பாரதீய ஜனதாக் கட்சியின் இத்தகைய கருத்துக்களுக்கு பாகிஸ்தான் கடந்த ஒருவாரத்தில் இரண்டு தடவை எச்சரிக்கை விடுத்தது.

சர்ச்சைக் குரிய காஷ்மீர் பிராந்தியத்தில் மூன்றில் இரண்டு பகுதி இந்தியாவின் கட்டுப்பாட்டிலும், எஞ்சிய ஒரு பகுதி பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலும் உள்ளது. பாரதீய ஜனதாக்கட்சி ஆட்சிக்கு வந்தால் இந்தப் பகுதியும் இந்தியாவுடன் இணைத்துக் கொள்ளப்படும் என்று பாரதீய ஜனதாக் கட்சியின் செயலாளர் கோவிந்தாச்சாரியா சீ. என். என். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருந்தார்.

இந்தியா இத்தகைய ஆக்கிரமிப்பு நடவடிக்கையை மேற்கொண்டால் பாகிஸ்தான் அதற்குத் தகுந்த பதிலடி கொடுக்கும் என்று பாகிஸ்தானின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் எச்சரிக்கை விடுத்தார்.

கடந்த வாரம் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சரும் இதே போன்று எச்

(9 ஆம் பக்கம் பார்க்க)

வெளிநாட்டுகம்பனிகளுக்கு சமதாக்கட்சி அச்சுறுத்தல்

மும்பாய், மார்ச் 9

இந்தியாவில் இருந்து வெளிநாட்டுக் கம்பனிகள் துரத்தியடிக்கப்படவேண்டும் என்று சமதாக் கட்சித் தலைவர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் புதிய அரசு அமைக்கவுள்ள பாரதீய ஜனதாக் கட்சியின் கூட்டணிக் கட்சிகளில் சமதாக்கட்சியும் ஒன்றாகும்.

பெப்ஸி கோலா இன்ரநேஷனல், ஜெனரல் மோட்டார் கூட்டுத்தாபனம், சுஸுகி கூட்டுத்தாபனம் ஆகிய சர்வதேச கம்பனிகள் இந்தியாவின் உள்நாட்டுக்கைத்தொழில் துறைக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கூறினார்.

இந்தியாவில் அரசமைக்கவுள்ள பாரதீய ஜனதாக் கட்சி இந்தக் கம்பனிகளை வெளியேற்றுவதற்குத் தேவையான சூழலையும், நிலைமைகளையும் ஏற்படுத்தும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

1977 ஆம் ஆண்டில் கைத்தொழில் அமைச்சராக இருந்த ஜோர்ஜ் பெர்னாண்டஸ் இந்தியாவில் கொக்கா கோலா கம்பனி மூடப்படுவதற்குக் காரணமாக இருந்தார்.

கருணாநிதியைபதவிவிலக கோருகிறார் சுவாமி

மதுரை, மார்ச் 9

தேர்தலில் தி. மு. க. கூட்டணி படுதோல்வி அடைந்ததற்குப் பொறுப்பேற்று முதல்வர் பதவியில் இருந்து கருணாநிதி விலகிவிட வேண்டும். ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியன்சுவாமி இவ்வாறு கோரியிருக்கிறார்.

மதுரை தொகுதியில்வெற்றியீட்டிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியின் தோல்வி மக்கள் மனநிலையைத் தெளிவாக்குகிறது. இப்போதுள்ளது போன்று ரேஷன் கடை ஊழல், பேருந்து கட்டண உயர்வு ஜெயலலிதா ஆட்சியில் இருந்ததில்லை.

பல விமர்சனங்களுக்கிடையே அ.தி.மு.க கூட்டணியை உருவாக்கி தேர்தலில் பெரும்பாலான இடங்களில் வெற்றி பெறப்பாடுபட்ட ஜெயலலிதாவுக்கு பாராட்டுத் தெரிவிக்கிறேன். தி.மு.க., த.மா.கா. தலைவர்கள் சிலரின் ஊழல்களை வெளிப்படுத்துவேன் என்று கருதியதால் தேர்தலில் தில்லுமுல்லுகள் செய்ய எண்ணினர். கருத்துக் கணிப்பு மூலமும் என்னை தோல்வியுறச் செய்ய எண்ணினர். இந்நிலையில் எனது வெற்றிக்காகப் பாடுபட்ட கூட்டணிக் கட்சியினரைப் பாராட்டுகிறேன்.

பி. ஜே. பிக்கு எதிராக வாக்களிக்க இடதுசாரிக் கட்சிகள் முடிவு

மத்தியில் அரசமைக்க அடல் பிஹாரி வாஜ்பாய் அழைக்கப்பட்டால் நம்பிக்கை வாக்கெடுப்பின் போது பாரதீய ஜனதாக் கட்சி அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்கப்போவதாக இந்தியாவின் பிரதான இடதுசாரிக் கட்சிகள் தெரிவித்துள்ளன.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (சீ. பி ஐ), மார்க்ஷிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி, போர்வட் பிளாக், புரட்சிசோஸலிஸ்ட் கட்சிஆகியன பாரதீயஜனதாக் கட்சி தலைமையிலான அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்கும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஏ. பி. வரதன் தெரிவித்துள்ளார்.

இது விடயத்தில் ஐக்கிய முன்னணியின் நிலைப்பாடு நாளைய கூட்டத்திலேயே தீர்மானிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலையுண்ட கைதியின் சடலம்மீது சிறுவன் நடனமாடக் கண்டேன்

கொலை விசாரணையில் சாட்சியம்

கொழும்பு, மார்ச் 9

''களுத்துறைச் சிறைச் சாலையின் 'டி' தொகுதியில் ஒருவரை வெட்டி இழுத்து வந்ததையும், அவரை சர்க்கடை வாய்க்காலில் தூக்கிப்போட்ட பின்னர் அந்த சடலத்தின் மீது சிறுவன் (கைதி) ஒருவன் ஏறி நின்று நடனமாடியதையும் கண்டேன்,''

களுத்துறைச் சிறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையின் போது சாட்சியமளித்த சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த நாகலிங்கம் ஜெயகாந்தன் என்ற கைதி முன்கண்டவாறு தெரிவித்தார்.

களுத்துறைச் சிறைச் சாலையில் கடந்த ஆண்டு டிசம்பரில் மூன்று தமிழ்க் கைதிகள் சகசிங்களக் கைதிகளால் கொலை செய்யப்பட்டது தெரிந்ததே. இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இரண்டாவது அமர்வு நடைபெற்ற போதே அவர் இவ்வாறு சாட்சியமளித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

எமது 'பீ' தொகுதிக்கு வந்த சிங்களக் கைதிகள் மீது தற்பாதுகாப்பிற்காகவே கல்லெறிந்தோம். கல்லெறியைத் தாக்குப்பிடிக்க முடியாமல் அவர்கள் 'டி' தொகுதியை நோக்கிஓடினர், அவர்களின் கைகளில் கத்தி, பொல்லுகள் இருந்தன.

நான் 'பீ' தொகுதியில் இருந்து 'டி' தொகுதியில் நடப்பவற்றை அவதானித்துக்கொண்டிருந்தேன்.

அப்போது ஒருவரை வெட்டி இழுத்து வந்து சாக்கடையில் போடுவதையும். இன்னொருவரை அடித்து அடித்து இழுத்துவருவதையும் கண்டேன். சுமார் 15 வயது மதிக்கத்தக்க பையன் (கைதி ஒருவர்) வெட்டிப் போட்டசடலத்தின்மீது ஏறி நடனமாடுவதைக்கண்டேன். இதை என்னால் மனதில் தாங்கிக்கொள்ள முடியாமலிருந்தது.

காவலுக்கிருந்த இராணுவத்தினரில் ஒருவரை நோக்கி இந்த அநியாயத்தைத் தடுத்து நிறுத்துங்கள், ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமாவது செய்து அவர்களை தடுத்துவிடுங்கள் என்று கூச்சலிட்டேன்.

இராணுவத்தினரை கையெடுத்துக் கும்பிட்டு இதனை த்தடுக்குமாறு கெஞ்சினேன். அதற்கு இராணுவ வீரர் வீணாகக் கூச்சல் போடாதே உனக்கு வெடி வைப்பேன் என்று என்னை நோக்கி துப்பாக்கியை நீட்டினார். நான் மௌனமானேன்.

பின்னர் இராணுவத்தினர் வந்து பிரச்சினை முடிந்து விட்டது. நீங்கள் உங்கள் தொகுதிகளுக்குச் சென்று விடுங்கள் என்று சிங்கள கைதிகளுக்கு சமிக்கை செய்ததை நான் கண்டேன்— என்று தெரிவித்தார்.

கண்ணீர் அஞ்சலி

திருமதி செல்வகுமாரி பாலசேகரம்
(செல்வி)

அவரது திடீர் மறைவினால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

சாயி பஜனை நிலையம்,
சுண்டுக்குளி.

(53929)

கரபந்தாட்ட சுற்றுப்போட்டி (செற்- அப்)

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சம்மேளனத்தின் பணிப்புரைக்கிணங்க யாழ். மாவட்ட கரபந்தாட்ட சங்கத்தினால் செற் - அப் முறையினாலான கரபந்தாட்டசுற்றுப்போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் கழகங்கள் தங்கள் விண்ணப்பங்களை **14—03—98**- ற்கு முன்னர் ''K. ஏகாம்பரம் (செயலாளர்) 37, இராசவீதி, நல்லூர்'' எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

செயலாளர்,
யாழ். மாவட்ட கர பந்தாட்ட சங்கம்.
37, இராச வீதி,
நல்லூர்.

(53932)

வேலணை

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

(வ - து)

பொதுக்கூட்டம்

27 – 03 – 1998

மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் 27-03-1998 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு மேற்படி சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் தலைவர் திரு. சு. சிவநேசன் அவர்களது தலைமையில் கூட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நிகழ்ச்சி நிரல்

01. இறை வணக்கம்
02. தலைமை உரை
03. சென்ற கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்
04. கூட்ட நிகழ்ச்சி நிரல் சமர்ப்பித்தல்
05. வேலணை மேற்கு கிளைக்கு காணி வாங்குவது பற்றி ஆராய்தல்
06. தும்புத் தொழிற்சாலை இயந்திரம் (பாராளுமன்ற உறுப்பினர் ஒதுக்கீட்டின் கீழ் பனை அபிவிருத்திச்சபை கையளித்தலைத் தெரிவித்தல்)
07. தும்புத்தொழிற்சாலை அமைப்பது பற்றி ஆராய்தல்
08. 1998 நிதி ஆண்டின் உசக் கடன் எல்லை தீர்மானித்தல்
09. செலவுகள் அங்கீகரித்தல்
10. சிறப்பு விருந்தினர் உரை
11. முதன்மை விருந்தினர் உரை
12. சங்க துணைவிதிக்கு அமைய கிளைமூலம் அங்கத்தவர் தெரிவு செய்யமுடியாமை ஆராய்ந்து தற்பொழுது தொழிற்படும் அங்கத்தவர்கள் மத்தியில் புதிய நெறியாளர் குழுவைத் தெரிவு செய்தல்
13. நன்றி உரை

அங்கத்தவர்கள் அனைவரையும் மேற்படி கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பு:

மேற்படி கூட்ட அறிவித்தல் சகல அங்கத்தவர்கட்கும் நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கிடைக்கப்பெறாதவர்கள் சங்கத் தலைமைக்காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பொது முகாமையாளர், தலைவர்.
03 – 03 - 1998

(53927)

விக்னா

கல்வி நிறுவனம்
DAY CLASS
பொருளியல்
திரு. விக்கி
PAPER CLASS
ஆரம்பம். **10 - 03 - 1998**
[7 மணி]
அளவையியல்
திரு. சயந்தன்
PAPER CLASS
சனி, ஞாயிறு 4 – 5 P.M.

(53935)

15, 16, 17, 18 ஆம்
புலமைப்பரிசில்
வினாத்தாள்கள்
பெற்றுக் கொள்ளலாம்.
மாதாந்த பயிற்சிப்
பரீட்சை
12-03-1998 இல் (POYA)
BOND வீதி நகர்.

(53936)

பல்கலைக் கழகங்களின்

பல்கலைக்கழக ஊழியர் பிரச்சினை குறித்து ஆராய்வு

அனைத்துப் பல்கலைக்கழகங்களினது போதனைசாரா ஊழியர்களினது தொழிற் சங்க சம்மேளனத்துக்கும் உயர்கல்வி அமைச்சருக்குமான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

போதனைசாரா ஊழியர்களுக்கான பொதுவான நிர்வாக முறைமை, மனித உரிமைகள் பாதுகாப்பு, ஓய்வூதியம், ஊழியர்களுக்கான கடன்வட்டி, சம்பள அதிகரிப்பு முரண்பாடுகள், ஒப்பந்த அடிப்படையிலான நியமனங்கள் மூலம் தொழிற் சங்கப் பலத்தை முறியடிக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் கலந்தாலோசிக்கப்படவுள்ளது.

அதேசமயம் ஊழியர்களுக்கான மருத்துவக் காப்புறுதித் திட்டம், நீண்டகாலம் சேவையாற்றிய ஊழியர்களைக்கௌரவித்தல் ஆகியவற்றை இன்னும் அமுல்படுத்தாமல் இருப்பது தொடர்பாக சம்மேளனத் தலைவர் ஜெ. பி. கரலியத்த பல்கலைக்கழக பதிவாளர்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். பல்கலைக்கழத்திலும் நிர்வாகிகளுககிடையில் நிலவும் முரண்பாடுகள் காரணமாக இன்னும்காப்புறுதித் திட்டத்தை அமுல்படுத்துவதில் தாமதம் காணப்படுவதாக பல்கலைக்கழக ஊழியர் சங்கம் விடுத்த செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

நூலக கட்டடவேலை பூர்த்தி

சாவகச்சேரி நகரசபை பொது நூலகத்தின் கிளை நூலகமான நுணாவில் பொது நூலகத்திற்கான கட்டட வேலைகள் துரிதமாக நடைபெற்று முடிவடையும் நிலையில் உள்ளன. தற்போது நூலகத்திற்கான மின் இணைப்புவேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இக்கட்டடம் பலலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

தற்போது இந் நூலகம் தனிதாயார் கட்டடம் ஒன்றில் இயங்கி வருகின்றது.

யா/ பொன்னாலை
வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை

பழைய மாணவர் சங்கம்

1-3-98 அன்று நடைபெற்ற சீட்டிழுப்பில் பரிசில்களைப் பெறுபவர்கள்

இலக்கங்கள்

1 ஆம் பரிசு — **1040** 2 ஆம் பரிசு — **573**
3 ஆம் பரிசு — **399**

ஆறுதற் பரிசுகள்:

1) **391** 2) **1429**
3) **802** 4) **176**
5) **1266**

(53931) நிர்வாகம்

DISPENSARY
AND SURGERY

ஆங்கில வைத்தியசாலை

கொக்குவில், சுன்னாகம்.

இராமகிருஸ்ணன் பாடசாலை அருகில் இருக்கும் கொக்குவில் வைத்தியசாலை அதன் கிளையை சுன்னாகம் இலங்கை வங்கிக்கு அண்மையில் நிறுவியுள்ளது.

தாதி– தாதி பயிலுநர்
சுன்னாகத்தில் பணிபுரிய விண்ணப்பம் கோரப்படுகின்றது.

Dr. வ. சிவராசா (49986)

உ
சிவமயம்

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோயில்

பங்குனித் திங்கள் உற்சவம்

காலம்:– ஒவ்வொரு வாரத் திங்கள் 16 – 03 - 98, 23 - 03 - 98, 30 – 03 – 98, 06 - 04 - 98, 13 - 04 - 98, ஆகிய நாள்களில் காலை 6 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை அபிஷேகம், பூசை உற்சவம் நடைபெறும். அத்தோடு கடை வளவில் கடை வைப்பவர்களுக்கு 13 – 03 – 98 வெள்ளி காலை 10 மணி தொடக்கம் கடைகள் ஏலத்தில் கொடுக்கப்படும். பணம் முழுவதும் கட்டி பற்றுச்சீட்டு பெற்றுக் கொள்ளவும். மேற்படி கோயில் பூசை திருவிழா, தேர்த்திருப்பணி முதலியவற்றிற்கு பணம் செலுத்துபவர்கள் கோயிலில் நிர்வாகத்திடம் ஒப்படைக்கவும். (வீடு வீடாகச் சென்று பணம் பெறுவதற்கு எமது நிர்வாகத்தால் எவரும் நியமிக்கப்படவில்லை).

சி. சிவகுரு,
தர்மகர்த்தா.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(53820)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழல்கள் தொடர்பாகவும் அஷ்ரப்புடன்விவாதிக்கதயார்

அமைச்சர் பௌஸி கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 9

தென்கிழக்கு அலகு விவகாரம் மட்டுமல்ல புனர்வாழ்வு, புனரமைப்பு துறைமுகங்கள் அமைச்சு ஊழல்கள் தொடர்பாகவும் அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப்புடன் பகிரங்க விவாதம் நடத்தத் தயார்.

மேற்கண்டவாறு போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி அறிவித்துள்ளார்.

கொழும்புப் பத்திரிகை ஒன்றில் "தென்கிழக்கு அலகு விவகாரம் குறித்து பகிரங்க விவாதம் புரிய அமைச்சர் பௌஸி தயாரா?" என அமைச்சர் அஷ்ரப் அண்மையில் சவால் விடுத்தார்.

அதற்கு அமைச்சர் பௌஸி பதில் அளிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தென்கிழக்கு அலகு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குத் தேவையா? இல்லையா? என்பதை உறுதியாக அமைச்சர் அஷ்ரப் தெரிவிக்க வேண்டும்.

நான் அரசின் தீர்வுத் திட்டத்துக்குத் தான் ஆதரவு தவிர தென்கிழக்கு அலகுக்கு அல்ல.

சிங்களவர்களிடம் தாம் தென்கிழக்கு அலகு கோரவில்லை என்கிறார். முஸ்லிம்கள், தமிழர்களிடம் வெவ்வேறு விதமாகப் பேசுகிறார். எல்லோரிடமும் நல்ல பிள்ளை பெயர்வாங்க அஷ்ரப் முனைகிறார்.

இப்படி பௌஸி தெரிவித்தார். (இ-21)

நீதிமன்ற ஊழியருக்கு இடர்க்காலப் படி

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ். மாவட்ட நீதிமன்ற ஊழியர்களுக்கு 1990 ஆம் ஆண்டுக்கான இடர்க்காலக் கொடுப்பனவுகள் தற்பொழுது வழங்கப்பட்டு வருகின்றன.

இது வரையில் இக்கொடுப்பனவைப் பெறத்தவறியவர்கள் 90 ஆம் ஆண்டு தாம் கடமையாற்றிய நீதிமன்றப் பதிவாளர்களிடம் இருந்து தமக்குரிய கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

90 ஆம்ஆண்டு கடமையாற்றிய நீதிமன்றங்கள் தவிர்ந்து தற்போது வேறு நீதிமன்றங்களில் கடமையாற்றுபவர்களும், ஓய்வுபெற்ற ஊழியர்களும் இந்தக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்முடியும்.

90 ஆம் ஆண்டு கடமையாற்றி தற்போது உயிருடன் இல்லாத ஊழியர்களின் உரித்துடையோரும் இக் கொடுப்பனவைப் பெறலாம். (ஐ-9)

மாவிட்டபுரம், கீரிமலை ஆலயங்களுக்கு ரூ. 2 கோடி

யாழ்ப்பாணம், மார்ச் 9

கடந்த கால வன்செயல் சம்பவங்களின் போது சேதமடைந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரர் கோயில் ஆகியவற்றை புனரமைக்க உடனடியாக இரண்டு கோடி ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

யாழ். அரச அதிபருக்கு வழங்கப்பட்டுள்ள இந்த நிதியில் இருந்து ஆலயங்களின் திருத்த வேலைகளைக் கட்டடத் திணைக்களமே மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதால் இந்த நிதியில் பெரும் பகுதி அந்த ஆலயத்தின் திருத்த வேலைகளுக்கே பயன்படுத்தப்படும் என்று தெரியவந்தது.

ஆலய கட்டடங்கள் மட்டுமே இந்த நிதியில் இருந்து புனரமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதால் ஆலயங்களின் தேர் மற்றும் வாகன திருத்த வேலைகளுக்கான நிதி இவற்றில் அடங்காது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

50 லட்ச ரூபாவுக்கு விளையாட்டு உபகரணம்

கொழும்பு, மார்ச் 9

யாழ். மாவட்டத்தில் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்ய 50 லட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி விளையாட்டுத்துறை அமைச்சருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் கடந்த கால சம்பவங்களினால் விளையாட்டு உபகரணங்கள் அழிந்ததால், புதிதாக விளையாட்டு உபகரணங்களை வழங்குமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியைக் கேட்டிருந்தார்.

இதையடுத்தே ஜனாதிபதி விளையாட்டுத்துறை அமைச்சருக்கு மேற்கண்ட பணிப்புரையை விடுத்துள்ளார். (ஐ-3)

கணக்குப் பதியுநர் பதவி: 3 தமிழர்களே தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 9

அரசாங்க, மாகாண அரசாங்கக் கணக்குப் பதியுநர் சேவையின் II "அ" பிரிவுக்கு ஆள்களை நியமிப்பதற்காக நடந்த பரீட்சையில் யாழ்ப்பாணத்தில் இருந்து தோற்றியோரில் ஒருவர் மட்டுமே சித்தியடைந்துள்ளார்.

இலங்கை முழுவதும் 148 பேருக்கு இப்பரீட்சை மூலம் பதவி உயர்வு கிடைத்துள்ள போதிலும், அவர்களில் மூவர் மட்டுமே தமிழர்கள் ஆவர்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த தாதபிள்ளை தர்மரட்ணம் என்பவர் மட்டுமே யாழ். மாவட்டத்தைச்சேர்ந்தவர் ஆவார்.

மட்டக்களப்பு பிரதேச செயலத்தைச் சேர்ந்த எஸ். இந்திராணி, திருகோணமலை, உள்ளூராட்சிச்சபையைச் சேர்ந்த எம். சசிகலா ஆகியோரே ஏனைய இருவரும் ஆவர். (ஐ.3)

கிராமிய சங்கங்கள் புனரமைப்பு

கொழும்புத்துறை, மார்ச் 9

யாழ். பிரதேசசபை செயலாளர் பகுதியில் உள்ள கிராமிய அபிவிருத்திச்சங்கங்களை புனரமைக்கும் பணிகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில் அண்மைக் காலத்தில் ஏழு கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் இப்பகுதிக் கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தரின் முயற்சியினால் புனரமைப்புச் செய்யப்பட்டன. (ஐ-30)

அதிகரித்த சம்பளம்

அரியாலை, மார்ச் 9

யாழ், பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம் ஊழியர்களுக்கான அதிகரித்த புதிய சம்பளக் கொடுப்பனவை பெப்ரவரி மாத சம்பள கொடுப்பனவுடன் சேர்த்து வழங்கியுள்ளது.

இந்த சம்பள உயர்வின் நிலுவைப் பணத்தின் மீதியையும் அடுத்தவாரம் முதல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

பாராட்டுவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 9

ஏழாலை தெற்கு உபதபால் நிலையத்தில் 30 வருடங்களுக்கு மேலாக உபதபால் அதிபராகக் கடமையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற ரி. சிவசுப்பிரமணியத்தின் சேவையைக் கௌரவிக்கும் முகமக சுன்னாகம் தபாலக ஊழியர்கள் ஏற்பாடு செய்த பாராட்டுவிழா கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றது. (ஐ-7)

சமுர்த்தி ஊக்குவிப்பாளரின் எண்ணிக்கைகுறைக்கப்படும்

கொழும்பு, மார்ச் 9

சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களை நிரந்தர நியமனத் திட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்காக ஊக்குவிப்பாளர்களின் எண்ணிக்கையை 12 ஆயிரம்ாகக் குறைப்பது குறித்து அரசு ஆராய்ந்து வருகின்றது.

கிராம சேவை அலுவலர் பிரிவு அடிப்படையில் நாடு எங்கும் 33 ஆயிரம் பேர் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

4 ஆயிரம் முதல் 8 ஆயிரம் வரையிலான சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களின் சேவை திருப்திகரமானதாக இல்லை என்றும் — இவர்கள் சேவையிலிருந்து நீக்கப்படவுள்ளார்கள் என்றும் கூறப்படுகிறது.

ஆள் குறைப்பு செய்யப்படும்போது இப்படியானோருக்கு [illegible] வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை அளிக்கவும் அரசு தீர்மானித்துள்ளது. (இ.21)

தென்னாபிரிக்காவில் பணிமனை அமைப்பதற்கு புலிகளுக்கு அனுமதிமறுப்பு

கொழும்பு. மார்ச் 9

தென்னாபிரிக்காவில் தமது பணிமனை ஒன்றை அமைப்பதற்கு விடுதலைப் புலிகள் விடுத்த வேண்டுகோள் தென்னாபிரிக்க அரசால் நிராகரிக்கப்பட்டு விட்டதாக ஏ.எவ்.பி. செய்தி வெளியிட்டுள்ளது.

ஏனைய ஐரோப்பிய நாடுகளில் உள்ளதைப் போன்று தென்னாபிரிக்காவிலும்தமது பணிமனையை அமைக்க விடுதலைப் புலிகள் விடுத்த வேண்டுகோளையே நெல்சன் மண்டேலா நிராகரித்துள்ளார்.

நெல்சன் மண்டேலாவுக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடையில் நிலவுகின்ற நல்லுறவை முறியடிக்கும் நோக்கிலேயே விடுதலைப் புலிகள் தென்னாபிரிக்காவில் தமது பணிமனையை அமைக்க முயற்சித்ததாகவும் அச்செய்தி தெரிவிக்கின்றது. (இ-09-1)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். கிளை
வெற்றிடங்கள்

1. ஆரம்ப சுகாதார அமைப்பாளர்:-

தெல்லிப்பழை, கோப்பாய், வாதரவத்தை, உடுப்பிட்டி ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார அறிவியலைப் பரப்புவதற்கும், அதனை அமுல்படுத்துவதற்குமான ஆரம்ப சுகாதார அமைப்பாளர்கள் தேவைப்படுகின்றார்கள். மேற்குறிப்பிட்ட பகுதி சுற்றாடலில் வசிப்போர் விரும்பப்படுவர்.

க.பொ.த (சா/த) / க.பொ.த. (உ/த) சான்றிதழ், ஆரம்ப சுகாதார அறிவு, அனுபவ சான்றிதழ் உடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. முதலுதவி ஆசிரியர்:-

முதலுதவிப் பயிற்சியாளர்களை பயிற்றுவிப்பதற்கான முதலுதவி ஆசிரியருக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

க.பொ.த (உ/த) / க.பொ.த (சா/த), முதலுதவிப்பயிற்சி சான்றிதழ் பெற்றவர்கள், அனுபவமும், ஆற்றலும், ஆங்கில அறிவும், உடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் 20-03-98 இற்கு முன்னதாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை கிளைத்தலைமையகத்தில் 22-03-98 மு.ப 10-00 மணிக்கு நடைபெறும். தகைமைச் சான்றிதழ்கள், நற்சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை ஆகியன நேர்முகப் பரீட்சைக்கு கொண்டு வருதல் வேண்டும்.

கௌரவ செயலாளர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்.
73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-3063)

ஐந்தாம் ஆண்டு நினைவுப்பூக்கள்

அமரர் சோ. கந்தையா
ஆசிரியர்

பிறப்பு: 06-09-1918 துடைப்பு: 05-03-1993
09-03-1998

ஆண்டு ஐந்து சென்றிடினும் அழியாத சித்திரமாய் நெஞ்சில் நிறைந்து விட்ட தெய்வமே!
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்!

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளை.

வேலணை 01. (53928)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

எட்டுப்பரப்புக் காணியும் இரண்டு அறைவீடும் எல்லா வசதிகளுடன் உடன் விற்பனைக்குண்டு. மற்றும் யன்னல், Iron Grill, கண்ணாடி யன்னல் கதவுகள், யன்னல் நிலைகளுடன் குளிர்சாதனப் பெட்டி (Usha), Wash Basin, Commode, கதிரைகள், (Celling Fan (Usha) சாப்பாட்டு மேசையும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி ப. பாலசுப்பிரமணியம், இளைப்பாறிய ஆசிரியை, உடுவில் தெற்கு, சுன்னாகம். [53840]

3 மாதங்கள் நிரம்பிய டாசோன் Dachshund நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 108/1, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். [53920]

நஷனல் NV 300, EN டெக் விற்பனைக்கு உண்டு. முகவரி: சி. சிவறஞ்சன், உதய சூரியன் வீதி, உடுவில், சுன்னாகம். [53933]

மணமகன் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1959 இல் பிறந்த அச்சுவினி நட்சத்திரமுடைய பெண்ணுக்கு மணமகன் தேவை. தொடர்பு இல. 711, C/o உதயன், யாழ்ப்பாணம். (53852)

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் நடந்ததை அறிய ஆவலாக உள்ள உங்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் நீங்கள் அனுப்பவேண்டிய நூல் அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை எழுதிய யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள். விலை ரூபா 50. [53740]

திருத்த வேண்டுமா?

ரி. வி, றேடியோ, டெக், மணிக்கூடுகள் திருத்திக் கொள்ளவும், ரி, வி. அன்ரனாக்கள் பொருத்திக் கொள்ளவும் நாடுங்கள்: வீனஸ் தன பாலசிங்கம் (Bsc)Ceylon Dip. In Electronic Engineengr iLondon, 284, ஸ்ரான்லி வீதி, நாகவிகாரை முன்பாக, யாழ்ப்பாணம். [சி/3069]

31ஆம் நாள் நினைவுப் பூக்கள்

திருமதி

நேசமணி இராசரத்தினம்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் பல ஆண்டுகளாக ஆசிரியராக இருந்து இளைப்பாறி 7-2-98 அன்று அமரத்துவம் அடைந்த நம் ஆசிரியரின் மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அவரது மறைவின் 31ஆம் நாளில் அவரை நினைவு கூர்ந்து நம் கண்ணீர்ப் பூக்களை உதிர்க்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
உடுப்பிட்டி அ. மி. கல்லூரி.

(53856)

இளங்கலைஞர் மன்றம்

நல்லூர்

வருடாந்த இசைவிழா

எமது மன்றத்தின் இசைப்பணியின் தொடர்ச்சியாக வருடாந்த இசைவிழா எதிர்வரும் சித்திரை மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து ஐந்து நாள்களுக்கு நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி இசைவிழா யாழ். குடா நாட்டில் தற்போது வசிக்கும் கலைஞர்களை உள்ளடக்கியதாக அமையவிருக்கிறது. விழாவுக்கான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதில் பல சிரமங்கள் இருப்பதனால் இளங்கலைஞர்கள், மூத்த கலைஞர்கள் யாவரும் தங்கள் பெயர், விலாசம், தகுதி, பங்கு பற்றும் நிகழ்ச்சி, நிகழ்ச்சிக்கான பக்கவாத்தியக் கலைஞர்கள் போன்ற விவரங்களை இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தபால் மூலமோ, நேரிலோ எமக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

விலாசம்:
செயலாளர்,
இளங்கலைஞர் மன்றம்,
சட்டநாதர் வீதி, நல்லூர்.

(53917)

அஜந்தாஸ் ஸ்ரூடியோ

★ இயற்கை எழில் அமைந்த காட்சிகளும் சிற்ப வேலை அமைந்த காட்சிகளும் வர்ணபின்னணித் திரைகளுங் கொண்ட கட்டமைப்பில் உங்களின் கலர்ப் படங்களை எமது உட்புற படப்பிடிப்பில் பிடித்துக் கொள்ளவும் —

★ மற்றும் உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான நிகழ்வுகளைப் படம் பிடித்திடவும் —

★ பாடசாலை மாணவர்களின் அறிமுக அட்டை, தேசிய அடையாள அட்டை என்பனவற்றையும் உடனுக்குடன் சிறந்த முறையில் (கறுப்பு/வெள்ளை) பெற்றுக் கொள்ளவும் —

நாட வேண்டிய ஸ்தாபனம்:

அஜந்தாஸ் ஸ்ரூடியோ

குறிப்பு: அந்தியேட்டிக்கான பெரிய படங்களும் (12X10) உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

உங்கள் தேவையே எங்கள் சேவை!

அஜந்தாஸ்
ஸ்ரூடியோ

வதிரி, நெல்லியடி,

(53828)

கேள்வி அறிவித்தல்

கல்வித்திணைக்களம் - யாழ்ப்பாணம், வலயம் 01

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள், யாழ்ப்பாணம், வலயம். 01 கல்வித்திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1998 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10. 00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 10. 30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

இல.	கேள்வி விவரம்	மீளளிக்கப்படும் வைப்புப்பணம்	மீளளிக்கப்படாத வைப்புப்பணம்
01.	கல்வித் திணைக்களத்தின் பாடசாலைக் கட்டட வேலைகள் கிளையில் கணனிக்கான அறை அமைப்பு	845/-	250/-
02.	கல்வித்திணைக்களத்தின் பாடசாலைக் கட்டட வேலைகள் கிளை, யாழ்ப்பாணம் நல்லூர் கல்விக்கோட்ட அலுவலகங்கள் ஆகியவற்றிற்கு மீன்சார வேலைகள்.	740/-	250/-
03.	யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 150 ஆவது ஆண்டு மண்டபத் திருத்தம் 150' x 37'	4.245/-	500/-

01. மேற்படி வேலைகளுக்கு ''இக்ராட்'' (ICTAD) நிறுவனத்தின் தரம் 'M' 09 தும் அதற்கு மேற்பட்ட தரத்திற்குப் பதிவு செய்து கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க தகுதி பெற்றவர்கள்.

02. வேலைகளுக்கு அமைவாக மேற் சொல்லப்பட்ட கேள்விப்பணத்தை யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களம், வலயம். 01 இன் கல்விப்பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து, கேள்விப் பத்திரங்களை 1998 – 03 – 09 ஆம் திகதியில் இருந்து 1998 – 03 – 16 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணி வரை கல்வித் திணைக்களப் பாடசாலைக் கட்டட வேலைகள் கிளையிற் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

03. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு, மூலப்பிரதியும் இணைப்பிரதியும் தனித்தனி இரு கடித உறைகளில் இடப்பட்டு, கடித உறைகளின் இடதுபுற மேற்பக்கத்தில் வேலையின் விவரமும் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிற் போட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தக்காரரின் முத்திரை இடப்பட்டு, ''தலைவர், கேள்விச் சபை, கல்வித்திணைக்களம், வலயம் 01 யாழ்ப்பாணம்.'' என விலாசமிடப்பட்டு, மேற்படி திணைக்களத்தில் கல்விப்பணிப்பாளரின் அலுவலக அறையினுள் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் 1998 ஆம் ஆண்டு 03 24 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திய, கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

04. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலைக் கட்டட வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறியத் தருகின்றோம்.

நா. சுந்தரலிங்கம்,
பிரதிக் கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம், வலயம் 01.

பாடசாலைக் கட்டட வேலைகள் கிளை,
கல்வித்திணைக்களம்,
செம்மணி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
03. 03. 1998.

(சி/3062)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

சின்னத்துரை தங்கவடிவேல்

மானிடனாய்: 06 – 07 – 1950 தெய்வமாய்: 07 – 02 – 1998

எங்கள் அன்புத்தெய்வமே!

காலமெல்லாம் எங்களை கண்ணீரில் வாழவைத்து விட்டு ஏன் தான் திடீரெனப் பாதை விட்டுப் பறந்து சென்றீர்?

நாங்கள் சூரிய உதயமில்லாத ஒரு சூனியப் பிரதேசத்தில் அல்லவா வாழ்கின்றோம்!

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்புமனைவி, பிள்ளைகள்,
சகோதரர், மைத்துனர், மைத்துனிமார்.

'சரஸ்வதி வாசம்'
புகையிரத நிலைய வீதி,
கொக்குவில்.

(49985)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

பொலீஸ் பதிவு தமிழில் வேண்டும்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றச் சட்டத்தரணிகளும் மல்லாகம் மாவட்ட நீதிமன்றச் சட்டத்தரணிகளும் யாழ்.சிவில் நிர்வாக அதிகாரி பிரிகேடியர் திலகரத்தினாவும் நடத்திய கலந்துரையாடலின் போது பல பிரச்சினைகள், விடயங்கள் ஆராயப்பட்டன.

பொதுவாக, குடாநாட்டில் இப்போது இயங்கும் நீதிமன்றங்களில் நிலவும் வசதிக் குறைவுகள், சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்றப் பணியாளர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் என்பன குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

நீதிமன்றங்கள் மதிப்புக்கும் பெருமைக்கும் உரியவை. நீதியே மனித வாழ்வை, சமூகத்தைச் செம்மைப்படுத்தி அறத்தை நிலைநாட்டுவது. அதனால் நீதிவழங்கும் நீதிமன்றங்கள் தமது அந்தஸ்தையும், புனிதத்துவத்தையும் பேணுவது அவசியம்.

ஆனால் குடாநாட்டில் உரிய கட்டட வசதி' ஆளணி வசதி, தளபாட வசதி இன்றியே நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. இவை தொடர்பாக எமது பத்திரிகையிலும் செய்திகள் மூலம் சுட்டிக் காட்டி வந்துள்ளோம்.

சட்டத்தரணிகள்—சிவில் நிர்வாக அதிகாரி சந்திப்பின் போது இக்குறைபாடுகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது.

ஏனைய விடயங்களைப் போன்றல்லாமல், நீதிமன்றம் சம்பந்தப்பட்ட குறைகளை உடனடியாகப் போக்குவதற்கு, நிவிர்த்தி செய்வதற்கு கொழும்பில் உள்ள அரச அதிகாரிகள் அக்கறையுடனும் வேகத்துடனும் செயற்பட வேண்டும் எனவலியுறுத்தவிரும்புகிறோம்.

பொலீஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் தமிழில் பதியப்படுவதன் அவசியமும் மேற்படி சந்திப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இது மிகவும் முக்கியமான விவகாரம் ஆகும்.

தமிழர் பிரதேசத்தில் அலுவல்கள் யாவும் தமிழிலேயே நடைபெற வேண்டும். இதில் விதிவிலக்கு எதுவும் இருக்க முடியாது; இருக்கவும் கூடாது. பொலீஸ் முறைப்பாடு தமிழில் பதியப்படாமலிருக்கும் போது முறைப்பாட்டின் உண்மைத் தன்மை கேள்விக்குரியதாகிவிடும்.

அந்த முறைப்பாட்டின் அடிப்படையில் வழக்கு விசாரணைகள் நடைபெறும் போது சரியான நீதி வழங்கப்பட முடியாத துரதிர்ஷ்டம் ஏற்படவும் வாய்ப்பு உண்டு.

இப் பிரதேசத்தின் நீதிமன்ற மொழி தமிழாக இருக்கும் போது, முறைப்பாடுகள் வேறு மொழியில் பதியப்படுவதால் பல முரண்பாடுகளும், சிக்கல்களும் உண்டாகும்.

ஆகையால், இதுவிடயத்தில் காரணம் சொல்லிக் காலம், கழிக்காமல் குடாநாட்டில் நிறுவப்பட்டிருக்கும் சகலபொலீஸ் நிலையங்களிலும் முறைப்பாடுகளைத் தமிழில் பதிவு செய்ய உடன்நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது விடயத்தில் வசதி செய்யமுடியாவிடில் இங்கு சிவில் நிர்வாகம் நடப்பதாக அரசு கூறுவதில் அர்த்தம் இல்லை!

காரைநகர் மாணவருக்கு கல்வி ஊக்குவிப்பு பரிசு

யாழ்ப்பாணம், மார்ச் 9

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபையினர் காரைநகர் மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு பரிசில் வழங்கும் திட்டத்தின் கீழ் 1995, 1996 ஆம் ஆண்டுகளில் ஜி. சீ. ஈ. உயர்தரம் மற்றும் சாதாரணதரம், ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் ஆகிய பரீட்சைகளுக்குத் தோற்றி உயர்சித்திபெற்ற மாணவர்களைப் பாராட்டி பரிசளித்து கௌரவிக்க உள்ளனர்.

கௌரவிப்பு விழா அடுத்த மாதம் 19 ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

உயர்தரப்பரீட்சையில் 260 புள்ளிகளுக்கு மேல் பெற்று பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்ற மாணவர்களும், சாதாரணதரப் பரீட்சையில் எட்டுப் பாடங்களில் விசேட சித்தி அல்லது ஏழு பாடங்களில் விசேட சித்தியும், மற்றைய பாடத்தில் திறமைச் சித்தி பெற்ற மாணவர்களும், புலமைப்பரிசில் பரீட்சையில் காரைநகர் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளிலிருந்து சித்தி பெற்ற மாணவர்களும் தத்தமது பாடசாலை அதிபர்களின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன் ''ச. பத்மநாதன், செயலாளர், 203/6, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்'' என்னும் முகவரிக்கு தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ஐ–7)

தபால் அலுவலகம் திறக்கப்பட்டது

திருநெல்வேலி, மார்ச் 9

கடந்த பல வருடகாலமாக மூடப்பட்டிருந்த புங்குடு தீவுகுறிகாட்டுவான் உப தபால் அலுவலகம் கடந்த 3ஆம் திகதி தொடக்கம் மீண்டும் திறக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

(ஐ–135)

சீனித்தொழிற்சாலை ஊழியர்கள் போராட்டம்!

கொழும்பு, மார்ச் 9

வேலைக் குறைப்புத் திட்டத்தின் கீழ் தமது சக ஊழியர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டது குறித்தும், சம்பளம் வழங்கல், பதவி உயர்வு, புதிய நியமனங்களில் இடம்பெறும் முறைகேடுகள் குறித்தும் ஆட்சேபம் தெரிவித்து கடந்த 10 நாள்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள செவுனுகல சீனித் தொழிற்சாலை ஊழியர்கள் 9 பேர் நேற்று முன்தினம் முதல் சாகும்வரையான உண்ணாவிரதத்தில் இறங்கியுள்ளனர்.

ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் இது வரை தொழிற்சாலைக்கு 38 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பொலீஸார் செவுனுகல சீனித்தொழிற்சாலைப் பகுதியைத் தமது கட்டுப் பாட்டின் கீழ் கொண்டு வந்து அப்பகுதியில் வன்செயல்கள் ஏதும் நடைபெறாமல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் தொடர்பாக அரசாங்கம் துரித நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாகவும், தொழிற்சங்கங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் சந்தித்துக் கலந்துரையாடுவதற்குத் தாம் உடனடியாகச் சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தருவதாகவும் எனவே ஊழியர்கள் தமது வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு உடனடியாக வேலைக்குத் திரும்ப வேண்டும் என்றும் கால் நடை அபிவிருத்தி, பெருந்தோட்ட, பொது வசதிகள் பிரதி அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஐ–7)

தலதா மாளிகையில் தங்கமாலை மறைவு!

கொழும்பு, மார்ச் 9

கண்டியிலுள்ள தலதா மாளிகைக்கு ஜப்பானிய பௌத்த தூதுக் குழுவினரால் வழங்கப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான தங்கமாலை காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புத்த பெருமானின் புனித தந்தம் வைக்கப்பட்டுள்ள பேழையில் வைப்பதற்காக 1997 இல் தலதா மாளிகைக்கு விஜயம் செய்த ஜப்பானிய பௌத்த தூதுக் குழுவினரால் இந்தத் தங்கமாலை அன்பளிப்புச் செய்யப்பட்டதாக 'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

(ஐ-10)

மீசாலைப் பகுதிக்கு மின் விநியோகம்

சாவகச்சேரி, மார்ச் 9

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மீசாலைப் பகுதிக்கு மின்சார விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. மீசாலை புத்தூர்ச் சந்தியில் வைக்கப்பட்டுள்ள 100 கே. வி. ஏ. ஜெனரேட்டர் மூலம் மாலை 6. 30 தொடக்கம் இரவு 11. 00 மணி வரை மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதே வேளை பொது மக்களின் நன்மை கருதி இலங்கை மின்சார சபையினர் வீதி விளக்குகளையும் முக்கியமான இடங்களில் பொருத்தி வருகின்றனர். அத்துடன் சேதமடைந்த மின் மார்க்கங்களை திருத்தம் செய்வதற்காக மின் தூண்களையும் நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஐ–31)

கணவரையும் பிள்ளைகளையும்காக்க அலையும் நிலையில் தமிழ்ப் பெண்கள்

மகளிர் தின நிகழ்வில் யாழ். மேயர் உரை

நல்லூர், மார்ச் 9

இன்று வடக்குக்கிழக்குப் பகுதிகளில் வாழும் பெண்கள் மீது பல சுமைகள் உள்ளன. வீட்டுத் தலைவனின் பொறுப்புக்களைத் தாங்கும் கடமைகளையும் அவர்களே செய்ய வேண்டியுள்ளது. அத்துடன் மனித உரிமை மறுப்புக்களால் தமது கணவன், பிள்ளைகளைக் காக்க இராணுவ முகாம்களுக்கும் அவர்கள் அலையவேண்டியுள்ளது. இந்த நிலை மாறி ஒரு சுமுகமான நிலை ஏற்பட வேண்டும்.

யாழ். மாநகர மேயர் திருமதி சரோஜினி யோகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் கண்காட்சி ஆய்வரங்கு நிகழ்ச்சிகளைத் தொடக்கி வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச மகளிர்தினத்தை முன்னிட்டு மகளிர் அபிவிருத்தி நிலையம் இதனை ஒழுங்கு செய்திருந்தது. யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இந் நிகழ்ச்சிக்கு மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜினி சிவச்சந்திரன் தலைமைவகித்தார்.

மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரன் மேலும் தமது உரையில் கூறியதாவது:.

இரண்டாயிரம் ஆண்டில். போர்க்கால சூழ் நிலையிலும் மகத்தான சேவைகளை ஆற்றி வரும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினருக்கு மனமார்ந்த நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன். போர்ச் சூழலில் ஆண்களின் கடமைகளைபொறுப்பேற்று குடும்பத்தலைவர்களாகவும் குடும்பத்தை வழிநடத்திச் செல்பவர்களாகவும். இன்று பெண்களில் பலர் எமது மத்தியில் இருந்து வருகின்றார்கள். பாதுகாப்புக் காரணங்களுக்காக ஆண்கள் வீடுகளில் முடங்கிக்கிடக்க பெண்களே அதிக குடும்பப் பொறுப்புக்களையும் சுமக்க வேண்டிய நிலையும் இருந்து வருகின்றது. பெண்களின் உரிமைகள் பேணப்பட்டு அவர்களின் நிலை சமுதாயத்தில் ஆண்களுக்கு சமமான இடத்தை அவர்கள் பெற வேண்டும். இன்று உலகளாவிய ரீதியில் பெண்கள் மத்தியில் ஏற்பட்டுவரும் விழிப்புணர்ச்சி இங்கும் ஏற்படவும், அவர்களின் வாழ்க்கை நிலை மேம்படவும் மகளிர் அபிவிருத்தி நிலையம் போன்ற நிறுவனங்களின் பங்களிப்பு முக்கியமானது என்றார்.

யாழ். கன்னாதிட்டி மக்கள் வங்கி முகாமையாளரும், எழுத்தாளருமான திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் உரையாற்றுகையில்—

''இன்று பலதுறைகளிலும் பெண்கள் முன்னேற்றம் கண்டுள்ளபோதிலும் ஆணாதிக்கமும், சீதனக் கொடுமையும் அவர்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளாக உள்ளன. சீதனம் சரிவரக் கொடுக்க முடியாமையால் பல இளம் பெண்களின் வாழ்வு கண்ணீர் நிறைந்த வாழ்வாகி இருண்ட நிலையில் இருந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. தங்கள் பிள்ளைகளுக்கு அதிகளவில் சீதனம் வாங்கி திருமணம் செய்வதில் பெண்களும் அதிக அக்கறைகொண்டவர்களாக இருப்பதையும் காண்கின்றோம். பெண்களின் முன்னேற்றத்திற்கு பெண்களே தடையாக இருக்கும் இந் நிலை எமது சமுதாயத்தில் மாற வேண்டும்''— என்றார்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கமலேஸ்வரி பென்னம்பலம், நல்லூர் விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் திருமதி புஸ்பா சின்னையா, யாழ். வலயம் ஒன்றின் உதவிக்கல்வி பணிப்பாளர் (மனையியல்) திருமதி இராஜேஸ்வரி சண்முகரத்தினம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள்.

''பெண்ணியம் தேவையற்ற ஒன்றா?'' என்ற தலைப்பில் ஆய்வரங்கும் நடைபெற்றது.

நிலைய மாணவிகளின் கைப்பணிப் பொருள்களின் காட்சி இரு தினங்கள் நடைபெற்றன. சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

(ஐ-103–135)

நாளை

மாசி 26

செவ்வாய்க்கிழமை

திதி: திரயோதசி முழுநாளும்

நட்சத்திரம்: ஆயிலியம் பின் இரவு: 2–17 வரை

பிரதோஷ விரதம்

சுபநேரம்: 10.54 – 12.04

இராகு காலம்: 3.24 – 4.54

உதயவாக்கு

இறந்து போனவர்களுக்காக அழுது கொண்டு இருப்பவர்களே கண்ணீரைத் துடையுங்கள். இதற்கு நீங்களும் தப்ப முடியாது என்பதனை நினைவு கொள்ளுங்கள்.

கவிஞர் கண்ணதாசன்

தவக்கால சிந்தனை

(13ஆம் நாள்)

இன்று பலர் வாழ்க்கையில் வார்த்தைகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றன. உள்ளங்கள் உடைவதற்கும், உறவுகள் பிரிவதற்கும் வார்த்தைகளே காரணமாகின்றன. ஒன்றாய் உறவாடி, ஒன்றாய்வாழும் குடும்பத்திலும், அயலிலும், உறவிலும், மற்றவர் குறைகாண்பதிலும், மற்றவர் மேல் பழி போடுவதிலும் தம்மை நீதிமானாக்கும் மன நிலையே பல பிரிவுகள் பிளவுகளுக்குக் காரணமாகின்றன.

''நான் சரி நீ சரியில்லை'' என்ற மனநிலையில் வாழ்பவருக்கு இறைவன் தரும் செய்தி 'தீர்ப்பிடாதீர்கள், நீங்களும் தீர்வுக்குள்ளாக மாட்டீர்கள்; கண்டனம் செய்யாதீர்கள், கண்டனம் பெறமாட்டீர்கள்; மன்னியுங்கள், மன்னிக்கப்படுவீர்கள்; கொடுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும்' என்பதாகும்.

தவக்காலப் பயணத்தில் எம்வார்த்தைகளை பயனுள்ளதாக்கி பகைமையை மறந்து நன்மைகள் கூறும் மனநிலையுடன்இரக்கமுள்ளமனதைப் பெற இறைவனின் பாடுகளில் நம் வாழ்வில் இணைவோமா?

- யோசப்பாலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர அலுவலகம் புதுமெருகு

நல்லூரிலுள்ள யாழ். மாநகர சபை அலுவலககட்டடம் புதிய மேயர் பதவி ஏற்பை முன்னிட்டு வர்ணம் பூசப்பட்டு மெருகூட்டப்பட்டுள்ளது. நாளை மறுதினம் புதன்கிழமைமுற்பகல் யாழ். மாநகர மேயராக திருமதி சரோஜினிதேவி யோகேஸ்வரன் உத்தியோக பூர்வமாக பதவி ஏற்கவிருப்பது தெரிந்ததே. இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அரசியல் ரீதியான தீர்வுகாணத் தவறின்

வடபகுதி இளைஞர்கள் குண்டுகளை கட்டிக்கொண்டு பாய்வது தொடரும்

கண்டியில் ஜனாதிபதி உரை

கொழும்பு மார்ச் 9 [illegible] உரிமைகளை அரசியல் ரீதியாகத் தீர்க்கத்தவறினால் பிரபாகரன் இல்லாவிட்டாலும் வடபகுதி இளைஞர்களும் யுவதிகளும் தங்களின் உடல்களில் வெடிகுண்டுகளைக் கட்டிக்கொண்டு பாயும் நிலை தொடரும்''.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கண்டி போகம்பரை திடலில் வெள்ளியன்று மாலை நடைபெற்ற பொ.ஜ.ஐ.மு. பிரசார பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஜனாதிபதி குமாரதுங்க உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் நீதி அரசியலமைப்பு இனவிவகார ஒருங்கிணைப்புஅமைச்சரும், பிரதி நிதி அமைச்சருமான ஜீ. எல். பீரிஸ், மின்சார வரி பொருள் அமைச்சரும், பிரதிப்பாதுகாப்புஅமைச்சருமான அநுருத்தரத்வத்தை, காணி விவசாய அமைச்சர் தி. மு. ஜயரத்ன, வனவளசுற்றாடல் அமைச்சர் நந்திமித்திர எக்கநாயக்க, பிரதி வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல உட்பட பல அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பலத்த பொலீஸ், இராணுவ பாதுகாப்புக்கு மத்தியில் மாலை சுமார் ஆறு மணியளவில் எவரும் எதிர்பார்க்காத விதத்தில் சாதாரண வான் ஒன்றில் ஜனாதிபதி திடீரென கூட்டம் நடைபெற்ற மேடைக்கருகில் வந்திறங்கினார். இக்கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க கூறியதாவது:-

இன்று யுத்தத்துக்காக நாலாயிரத்து எண்ணூறு கோடி ரூபா செலவாகின்றது. சற்று அதிகமான நிதியும் மேலும் சற்றுஅதிகமான இராணுவ வீரர்களும் இருக்குமேயானால் யுத்தம் முடிவுக்கு வந்திருக்கும். சுமார் 90 சதவீத வடக்குப் பிரதேசம் இன்று அரசின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. மேலும் பத்து சதவீதமே பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. அவற்றில் அதிகமானவைகளைக் கட்டிக்கொண்டு பாயும் நிலை தொடரும்''.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கண்டி போகம்பரை திடலில் வெள்ளியன்று மாலை நடைபெற்ற பொ.ஜ.ஐ.மு. பிரசார பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஜனாதிபதி குமாரதுங்க உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் நீதி அரசியலமைப்பு இனவிவகார ஒருங்கிணைப்புஅமைச்சரும், பிரதி நிதி அமைச்சருமான ஜீ. எல். பீரிஸ், மின்சார வரி பொருள் அமைச்சரும், பிரதிப்பாதுகாப்புஅமைச்சருமான அநுருத்தரத்வத்தை, காணி விவசாய அமைச்சர் தி. மு. ஜயரத்ன, வனவளசுற்றாடல் அமைச்சர் நந்திமித்திர எக்கநாயக்க, பிரதி வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல உட்பட பல அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பலத்த பொலீஸ், இராணுவ பாதுகாப்புக்கு மத்தியில் மாலை சுமார் ஆறு மணியளவில் எவரும் எதிர்பார்க்காத விதத்தில் சாதாரண வான் ஒன்றில் ஜனாதிபதி திடீரென கூட்டம் நடைபெற்ற மேடைக்கருகில் வந்திறங்கினார். இக்கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க கூறியதாவது:-

இன்று யுத்தத்துக்காக நாலாயிரத்து எண்ணூறு கோடி ரூபா செலவாகின்றது. சற்று அதிகமான நிதியும் மேலும் சற்றுஅதிகமான இராணுவ வீரர்களும் இருக்குமேயானால் யுத்தம் முடிவுக்கு வந்திருக்கும். சுமார் 90 சதவீத வடக்குப் பிரதேசம் இன்று அரசின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. மேலும் பத்து சதவீதமே பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. அவற்றில் அதிகமானவை காடுகளே. யுத்தம் ஒரு முடிவுக்கு வந்துவிடுமேயானால் யுத்தத்துக்கு செலவாகும் நிதி அனைத்தும் நாட்டின் சுபீட்சத்துக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் பயன்படும் நிலை உருவாகும்.

நாம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றபோது இந்த நாட்டில் மனிதத்துவமோ, ஜனநாயகமோ, மனித சுதந்திரமோ எதுவுமே இருக்கவில்லை. பதினேழு ஆண்டுகள் நாட்டை ஆட்சிசெய்த ஐ. தே. கட்சியினர் நாட்டைக் கபளீகரம் செய்துவிட்டார்கள்

இன்று ஐ. தே. கட்சியினர் நாடாளுமன்ற பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். விஜய பாலமெண்டிஸின் ஊழல்கள் தொடர்பாக அவரது குடியுரிமை சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவரவிருப்பதால் இத்தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்கவோ எதிராக வாக்களிக்கவோ முடியாத ஒரு பின்னணியில் தான் ரணில்விக்கிரமசிங்க இந்த பகிஷ்கரிப்பை மேற்கொண்டுள்ளார்.

அன்று பிரேமதாசாவும், ரணிலும், எல். ரி. ரி. ஈ. பயங்கரவாதிகளுக்கு கொடுத்துதவிய குண்டுகளாலும், பணத்தாலுமே ஸ்ரீ தலதா மாளிகைக்குக் கூட அவர்கள் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இன்று எம்மை கடுமையாக விமர்சிக்கின்ற பௌத்த மதகுருமார்கள் அன்று பயங்கரவாதிகளுக்கு ஆயுதங்களையும், பணத்தையும் கொடுத்தமைக்கு எதிராகவோ, நாடெங்கும் வீதி, வீதியாக நம்நாட்டு இளைஞர்களை எரித்து படுகொலை செய்தமைக்கு எதிராகவோ குரல் கொடுக்காதது ஏன்? — என்றார் ஜனாதிபதி. (ஐ-10)

விவசாய டிப்ளோமா பயிற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம் ஒருவருட கால விவசாய டிப்ளோமா பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஜி. சீ ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த 17 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

பயிற்சிக்காலத்தில் உதவுதொகை வழங்கப்படுவதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விருப்புவோர் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கள் காலை 9 மணிக்கு தமது தகமைச் சான்றிதழ்களுடன் நேரில் வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ஐ-7)

ஆடு, மாடு சினைப்படுத்தல்

சண்டிலிப்பாய் மார்ச்9

சண்டிலிப்பாய் கால் நடை வைத்திய அதிகாரி பணிமனையில் ஆடு, மாடுகளுக்கு செயற்கை முறையிலான சினைப்படுத்தல் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆடு, மாடுகளை சினைப்படுத்த விரும்புவோர் இந்த அலுவலகத்தில்காலை 10.30 மணிக்கு முன்புபதிவு செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது

இதேவேளை நல்ல இன கோழிக் குஞ்சுகளை பெற விரும்பும் பொதுமக்களும் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

எரிபொருள் நிலையத்தில் தங்குமிட வசதி இல்லை

ஊழியர்கள் அசௌகரியம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ். பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையம் தற்போது யாழ். முற்றவெளியில் இயங்கி வருகின்றது.

இங்கு ஐந்து ஊழியர்கள் கடமையாற்றி வருகின்றனர். இதனைவிட பரல்களை ஏற்றி இறக்குவதற்கும் தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இந் நிலையத்தில் ஊழியர்கள் தங்கி நின்று பணியாற்றுவதற்கு போதிய இருப்பிட வசதிகள் இல்லாததால் தாம் அவதிப்படுவதாக ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

உபகரணங்களை வைத்துப் பராமரிப்பதற்கும் மற்றும் ஊழியர்கள் தங்கிநின்று பணி புரிவதற்கும் உரிய கட்டட வசதி செய்யப்பட வேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர்.

மண்எண்ணெய்க் குதத்தில் இருந்த மண்எண்ணெயை பரல்களில் நிரம்பும்- அடிக்கும் ஊழியர்கள் உச்சி வெயிலில் காய்கின்றனர்.

இதேவேளை- இந்த எரிபொருள் நிலையத்தைப் புனரமைப்புச் செய்து தருமாறு யாழ். ப.நோ.கூ. சங்கம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைக் கேட்டுள்ளது. (ஐ-17-7)

யாழ். ஆஸ்பத்திரியின்

5 மாடிக் கட்டடத்தின் கீழ் தளம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ். போதனாவைத்திய சாலைக்கென கட்டப்பட்டு முற்றுப் பெறாத நிலையில் உள்ள 5 மாடிக்கட்டடத்தின் கீழ்த்தளப்பகுதி முழுவதையும் பாவனைக்குரிய முறையில் புனரமைப்புச் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதனைப் புனர் நிர்மானம் செய்யும் பொறுப்பினை ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் (யூ. என். டி. பி) ஏற்றுள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன் ஆஸ்பத்திரி நிர்வாக உயர்மட்டக் குழுவினருடன் ஐ. நா. அபிவிருத்தித்திட்ட அதிகாரிகள் நடத்திய கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட முடிவின் படியே இத் திட்டம் நடை முறைப்படுத்தப்படவுள்ளது.

யு. என். டி. பி. இக் கட்டட புனர் நிர்மாண வேலைகளை தனது நேரடி மேற் பார்வையில் மேற்கொள்ளும்.

இதன் பொருட்டு தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ள கொழும்பு சென்றுள்ள அதிகாரிகள் யாழ்ப்பாணம் திரும்பியதும் இப் புனர் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட இருப்பதாகத் தெரிய வருகிறது. (ஐ-15)

பாலம் சேதம்

அரியாலை மார்ச் 9

சுண்டுக்குளி விதானையார் வீதியில் உள்ள பாலம் ஒன்று நீண்டகாலமாக சேதமடைந்து காணப்படுகிறது. (ஐ-17)

பாலர் ஆசிரியராக

மேற்படி பயிற்சி பெற க. பொ. த. சாதாரணத் தகைமையுடையோரும், மேல் தகைமையுடையோரும் தபால் வழியில் ஆறுமாதத்தில் பயிலலாம்.

பாலர் ஆசிரியர் சங்கம்

20, அச்சக ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(53921)

கஞ்சாத்துறைச் சிறையில் உள்ள மேலும் 100 பேரின் விவரங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 9

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழும், அவசரகாலச் சட்டத்தின் கீழும் கஞ்சாத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வடபகுதியைச் சேர்ந்தவர்களில் மேலும் 100 பேரின் பெயர் விவரங்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாணக் கிளைக்கு கிடைத்துள்ளன.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:

தேவேந்திரன் இரகுவரன் (நீர்வேலி), வெற்றிவேலு சிவலோகநாதன் (கொழும்புத்துறை), நந்தகோபால் ஜீவன் (கொக்குவில்கிழக்கு), அங்கமுத்து செல்வகுமார் (சிதம்பரபுரம் வவுனியா), செல்லத்தம்பி தெட்சணாமூர்த்தி (ஸ்கந்தபுரம்.விசுவமடு), அர்ஜுனன் சந்திரன் (கொடிகாமம்), அழகரத்தினம்நகுலதாஸ் (கரணவாய் மேற்கு), செல்வரத்தினம் குமணன் (உரும்பிராய் வடக்கு), சுப்பிரமணியம் ஸ்ரீகாந்தன் (உரும்பிராய் மேற்கு), ஐ. பாஸ்கரன் (குடத்தனை வடக்கு).

குசைப்பிள்ளை அந்தோனிதாஸ் (பொலிகண்டி), பாலசிங்கம் ஆனந்தராசா (புன்னாலைக்கட்டுவன் வடக்கு), வேலுக்கண்ணன் (கண்டிவீதி, கிளிநொச்சி), கந்தையா ஜெயலிங்கம் (தவசிக்குளம், கொடிகாமம்), ஜெனற் ஜீவராஜா (நாவலர் வீதி, யாழ். நகர்), இறப்பியல் நிக்கலஸ் (நாவாந்துறை, வடக்கு), A. றொபேட் மக்ஸ்அலன் (குருநகர்), குமாரசாமி வைரவநாதன் (தனங்கிளப்பு), அமிர்தநாதர் சில்வெஸ்ரர் (சில்லாலை மேற்கு), பெருமான் இரமேஸ் (வன்னேரிக்குளம், கிளிநொச்சி).

தங்கவேல் சிவபாலன் (கோண்டாவில் கிழக்கு), செல்வரத்தினம் செல்வகுமார் (கோண்டாவில் வடக்கு),எம். செபஸ்தியன் மஸ்குவின்சன் (பேசாலை, 4ஆம் வட்டாரம்), சங்கரப்பிள்ளை சுரேஸ் (மட்டுவில் கிழக்கு), ரீ. இராமச்சந்திரன் (மானிப்பாய்), ரீ. சுகிந்தன் (கொம்மந்துறை), எஸ். கோணேஸ்வரன்(உரும்பிராய் கிழக்கு), சவரிமுத்து லோகநாதன் (வன்னேரிக்குளம், கிளிநொச்சி), ஜே. அலிஸ்ரன் மேரிவில் (குருநகர்), நயினா [illegible] (நாவாந்துறை), தங்கராசா [illegible] (கொடிகாமம்), உடுப்பிட்டி), க. இந்திரன்(உயரப்புலம், இளவாலை), முகமட் ஆஸிப் (மரைத்தீவு அகதிமுகாம், புத்தளம்), ஜெசிற்றன்(பெரிய குஞ்சுக்குளம், மடு, மன்னார்), சோமசுந்தரம் ஜெயக்குமார் (மறவுவைத்தகுளம், வவுனியா), வன்னிய சிங்கம் லோகசோதி (கணுக்கேணிகிழக்குமுள்ளியவளை), துரைராசா பத்மநாதன் (வித்தியாலய வீதி, திருகோணமலை), பற்றிக் அருள்தாஸ் (அல்வாய் மேற்கு), வேலாயுதம் புவனேஸ்வரன் (அச்சுவேலி), சண்முகசுந்தரம் சசீசன் (நாவற்குழி), A. யூடித் ஜெரோம் விமல்ராஜ் (நெல்லியடி), S. சுவாம்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை (உடுவில்), நாகண்டபொடி யோகதாஸ் (கொக்கட்டிச்சோலை).

கனகரத்தினம் கமலேஸ்வரன் (சரசாலை தெற்கு), சுப்பிரமணியம் பரமேஸ்வரன் (அக்கரைப்பற்று), வேலு கனகரத்தினம் (நொச்சிக்குளம்), நாகலிங்கம் ஜெயகாந்தன் (சாவகச்சேரி), ஆறுமுகம் இரமேஸ் (வத்தேகம), யோகதாஸன் அந்தோனி (குருநகர்), M. குலசேகரம் (நாவாந்துறை), தங்கராசா [illegible] (கொடிகாமம்), உடுப்பிட்டி), க. இந்திரன்(உயரப்புலம், இளவாலை).

வாழ்த்துகின்றோம்

இன்று (09 - 03 - 1998) சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து பதவி ஏற்கும்

திரு. ஆறுமுகம் கதிரவேல்

(இளைப்பாறிய அதிபர், சமூக சேவையாளர்)

அவர்களை ஆலடி ஐங்கரன் துணை கொண்டு நீடூழி வாழ்க வெனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திரு.வே.க.தங்கவேல் குடும்பத்தினர்,
திரு. செ. வீரராசா குடும்பத்தினர்,
திரு.மா. அனந்தராசன் குடும்பத்தினர்,
திரு.வே.க.வரதவேல் குடும்பத்தினர்.

அல்வாய். (53930)

கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியை
திருமதி யோகவதி யோகரட்ணம்
அவர்களின் அன்புக் கணவர்
அமரர் சபாபதிப்பிள்ளை யோகரட்ணம்

அவர்களது திடீர் மறைவினால் ஆறாத் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்,
யா/ சேர்.வை. து. ம. ம. வி. வேலணை.

(53938)

digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அரசியலுக்காகவே போர் நடக்கிறது

நாட்டைப் பிடிப்பதற்காக அல்ல!

ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 9

நாட்டு நலனில் அரசுக்குள்ள அதே அக்கறை ஐ. தே. க வினராகிய எமக்கும் உண்டு இந்தப் பொறுப்பை நாம் தட்டிக்கழிக்கவில்லை. யுத்த மூலம் தீர்வா? பேச்சு வார்த்தை மூலம் தீர்வா? என்பதை அரசுதான் தீர்மானிக்கவேண்டும்.

இப்பொழுது இங்கு நடைபெறும் யுத்தம் அரசியலுக்காக நடைபெறுகிறதேயொழிய நாட்டைப் பிடிப்பதற்காகவல்ல. எனவே அரசியலுக்கான யுத்தம் முடியும் காரியமாக தோன்றவில்லை.

இப்படி ஐ. தே. க. தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமாகிய ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அரசியல் தீர்வு யோசனைக்கு ஐ. தே. க. சமர்ப்பித்துள்ள மாற்று யோசனைகளின் இரண்டாம் தொகுதி தொடர்பாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமிழ் பத்திரிகையாளர்களை அழைத்து அதிலுள்ள அதிகாரப் பரவல் தொடர்பான விளக்கங்களை தந்தார். இப்படி விளக்கம் அளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு ஐ. தே. கவின் நிலைப்பாட்டை விளக்கினார்.

'அரசு முன்வைத்திருக்கும் அரசியல்தீர்வு யோசனைகள் மூலம் புரையோடியுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என்று அரசு நினைத்தால்அதற்கு குறுக்கே நாம் நிற்கமாட்டோம்'.

நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் கொண்டு வருவதற்கு அரசாங்கத்தின் முன் இன்று நான்கு வழிகள் உள்ளன.

ஒன்று யுத்தம் மூலம் விடுதலைப் புலிகளை ஒரங்கட்டுவது.

தான் தயாரித்துள்ள அரசியல் தீர்வு யோசனைகளை நிறைவேற்றுவது.

இதற்கு அமைவாக நாடாளுமன்ற தெரிவுக்குழுவை கூட்டி நாங்கள் சமர்ப்பித்துள்ள இனப்பிரச்சினை தீர்வுக்கான யோசனைகளையும் தங்களுடைய யோசனைகளுடன் சேர்த்து ஆராய்ந்து நல்லதொரு முடிவுக்கு வருவது.

இந்த வழி சாத்தியப்படாது என்று நினைத்தால் ஜனாதிபதிக்கும், எனக்கும் இடையே பிரிட்டனின் உதவியுடன் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட இரு கட்சி நோக்குடன் பிரச்சினையை அணுகும் உடன்பாட்டின் பிரகாரம் செயல்பட முன் வருவது. இந்த உடன்பாடு இன்னமும் செத்துவிடவில்லை என்பதே எமது நிலைப்பாடாகும்.

இந்த நான்கு விடயங்கள் தொடர்பாக நல்லதொரு நிலைப்பாட்டுக்கு வரவேண்டிய பொறுப்பு இப்பொழுது அரசிடமே உள்ளது.

இதனைவிடுத்து பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர ஐ. தே. க. ஒத்துழைக்க மறுக்கிறது. காலத்தை வீணடிக்கிறது என்று எம்மீது அரசு குற்றஞ்சாட்டுவதில் நீதி நியாயம் இருப்பதாகத் தெரியவில்லை.

''அரசு சமர்ப்பித்துள்ள தீர்வு யோசனைகள் எமக்கு ஏற்புடையது அல்ல என்று நாங்கள் கூறினோம். அப்படியானால் உங்கள் மாற்று யோசனைகள் என்ன என்று கேட்டார்கள். அவர்கள் கேட்டவாறு எமது மாற்று யோசனைகளின் முதல் பிரிவை ஏற்கனவே அரசிடம் சமர்ப்பித்துவிட்டோம். இப்பொழுது இரண்டாம் தொகுதியை தயாரித்து கொடுத்திருக்கின்றோம்.

இன்னமும் இரண்டொரு விஷயங்கள் தான் எஞ்சி உள்ளன. அதாவது அரசு காணி உரிமை விவகாரம், அதிகாரப்பரவல் அலகு என்பன அதில் [illegible]. இதனை நாம் இந்த மாத முடிவுக்குள் சமர்ப்பித்து விடுவோம். நான் வெளிநாடு செல்கிறேன். திரும்பி வந்ததும் அந்த மூன்றாம் தொகுதி யோசனைகளும் கையளிக்கப்பட்டுவிடும்.

தற்போதுள்ள அரசமைப்பு திட்டத்தின் 13 ஆவது திருத்தப் பிரகாரம் அமுலுக்கு கொண்டு வரப்பட்ட மாகாண ஆட்சி முறையை அடிப்படையாக வைத்தே எமது அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்த மாகாண சபைச்சட்டத்தின் பிரகாரம் வடக்கு — கிழக்கு தற்காலிகமாக இணைக்கப்பட்ட ஒருமாநிலமாகவே உள்ளது. எனவே இந்த தற்காலிக இணைப்பு தொடர்ந்தும் குறிப்பிட்ட சில வருடங்கள் இருக்கக் கூடிய வகையிலேயே எமது யோசனைகள் இருக்கும். இதில் யாரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

தமது யோசனைகளுக்கு மாற்றீடாக நாம் சமர்ப்பித்திருக்கும் எமது யோசனைகளை அரசு ஏற்கவிரும்பினால் பாராளுமன்ற தெரிவுக் குழுவை கூட்டி அதன் சாதக பாதகங்களை அரசு பரிசீலிக்கலாம். விரிவுபடுத்த வேண்டிய அம்சங்கள் சேர்க்கப்படவேண்டிய அம்சங்கள் ப்ற்றி அங்கு ஆராயலாம். இதனை விடுத்து தெரிவுக்குழுவைஇனிக்கூட்டமாட்டோம் என்று அரசு அடம் பிடிக்குமானால் எந்த ஓர் அரசியல் தீர்வையும் கொண்டுவரும் நோக்கம் அரசுக்கு இல்லை என்பதனையே அது புலப்படுத்தும்.

தமிழ்கட்சிகள் ஏமாற்றம்

எமது அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் தொடர்பாக சில தமிழ்கட்சிகளுடனும், முஸ்லிம் கட்சிகளுடனும் நான் பேசினேன்.

அவர்கள் பெருத்த ஏமாற்றமாக இருக்கிறது என்று கூறினார்கள். இவை யோசனைகள் தானே! படித்துப் பார்த்து திருத்த வேண்டிய, சேர்க்க வேண்டிய விடயங்கள் இருந்தால் கூறுங்கள். மீண்டும் கூடிப் பேசுவோம் என்று நான் கூறினேன்.

அவர்களுடன் மீண்டும் சந்தித்துப் பேசுவேன் இப்படி அவர் கூறினார்.

(இ–10)

மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டிகள் பாடசாலை அதிபர் வே. ஞானகாந்தன் தலைமையில் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட பாடசாலை மைதானக் காணியில் இன்று பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினராக ஓய்வு பெற்றுச் சென்ற பாடசாலை அதிபர் கா. தவராசா, திருமதி சரஸ்வதிப் பிள்ளை தவராசா ஆகியோர் கலந்து கொள்வர். (இ–உ)

★ ★ ★

யாழ். இந்து மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை கல்லூரி அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம அதிதியாக யாழ். நல்லூர் கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. அருளானந்தம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி அதிபர். அ. சிறிக்குமரன் கலந்து கொள்வார். (ஐ–135)

★ ★ ★

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமையன்று கல்லூரி அதிபர் ரி. சந்தோஷம் தலைமையில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பிரதம அதிதியாக யாழ். நல்லூர் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. அருளானந்தம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக யாழ். நவீன சந்தையில் இயங்கும் காங்கேசன்துறை மக்கள் வங்கி முகாமையாளர் எஸ். தங்கசிவம் கலந்து கொள்வார். (ஐ–135)

★ ★ ★

உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அதிபர் பொ. அம்பலவாணர் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

உடுவில் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் பிரதம விருந்தினராகவும், உடுவில் பிரதேசச் செயலரும், மேலதிக அரசாங்க அதிபருமான ஆ. மகாலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ஐ–7)

★ ★ ★

பளை மத்திய கல்லூரி இல்லமெய்வல்லுநர் போட்டிகள் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் அ. கைலாயபிள்ளை தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக பளை பிரதேச செயலர் சு. புத்திசிகாமணியும், சிறப்பு விருந்தினராக பளை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ச. அம்பிகைபாலனும், கௌரவ விருந்தினர்களாக பளை பிரதேச சபை செயலாளர் கு. ந. பாலச்சந்திரன், பளைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி. சுந்தரலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஐ–117)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 9

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 1.00 மணியளவில் அதிபர் சி. யோகசிங்கம் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

உடுவில் கல்விக்கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் அ. தற்பரானந்தன் பிரதம விருந்தினராகவும், வித்தியாலயத்தின் முன்னாள் உபஅதிபர் க. செல்வராசா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ–7)

★ ★ ★

யாழ். கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். (இ·9)

மூன்றுமாத காலத்துக்கு போதுமான உணவு களஞ்சியப்படுத்தப்படும்

யாழ். அரச அதிபர் நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் உணவுப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்க மூன்று மாதகாலத்துக்கு தேவையான கையிருப்பு களஞ்சியப்படுத்தப் படவிருக்கிறது.

யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்திற்கான கப்பல்போக்குவரத்துபாதிக்கப்படும்போது குடா நாட்டுக்கான உணவுப் பொருள்கள் ஒழுங்காக வருவதில்லை. இதன் காரணமாக உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக 3மாதத்துக்கான உணவுப் பொருள்களை களஞ்சியப்படுத்தி வைக்க யாழ். செயலகம் முடிவு செய்துள்ளது.

இந்தப் பொருள்கள் அவசர நேரத்தில் மட்டுமே பயன் படுத்தப்படும் என்றும்—

இதற்கு மேலதிகமாக எடுத்துவரப் படும் பொருள் நிவாரண விநியோகத்துக்கு பயன்படுத்தப்படும் என்றும்— தெரிவிக்கப்பட்டது. (இ–3)

மீன்பிடிக்கும் எல்லையை விஸ்தரிக்குமாறு கோரிக்கை

கொழும்பு, மார்ச் 6

யாழ். மாவட்டத்தில் மீன் பிடிக்கும் கடல் எல்லை விஸ்தரிக்கப்பட வேண்டும் அத்துடன் யாழ். மாவட்டத்தில் பிடிக்கப்படும் மீன் மற்றும் கடற் பொருள்களை நாச்சிக்குடா ஊடாக உயிலங்குளத்துக்கு எடுத்துச் சென்று கொழும்புக்கு அனுப்ப ஏற்பாடு செய்யவேண்டும்''.

வன்னி மாவட்ட புளொட் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சண்முகநாதன் மேற்கண்டவாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசரகாலசட்ட நீடிப்பு பிரேரணை விவாதத்தில் அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:–

யாழ். மாவட்டத்தில் மீனவர்கள் தமது தொழிலை மேற்கொள்ள கடல் எல்லை விஸ்தரிக்கப்பட வேண்டும். கல்முனைவரை மீன் பிடிக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

திருகோணமலை மாவட்டம் தம்பலகமத்தில் தமிழர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் ஊர்காவலர்களால் மேற் கொள்ளப்பட்டது.

ஊர்காவலர் படைகலைக் கப்பட வேண்டும். தமிழர்கள் இடம் பெறத்தக்கதாக ஊர்காவலர் படை அமைக்கப்பட வேண்டும்.

வவுனியா, திருகோணமலை, மன்னார் பகுதியில் உள்ள அகதிகள் யாழ்ப்பாணம் திரும்ப வசதியாக விமானக் கட்டணம் குறைக்கப்பட வேண்டும். — இப்படி அவர் கூறினார். (இ–3)

பாரதீய....

(மூன்றாம் பக்கத்தொடர்)

சரிக்கையை விடுத்திருந்தார்.

''இந்தியா வீரம் காட்ட முற்பட்டால் அது நினைவில் வைத்திருக்கக் கூடியவாறு பதில் அளிக்கப்படும்'' என்று அவர் கூறினார்.

பாகிஸ்தானியர்களிடையே சந்தேகம் ஏற்படக் கூடியவாறு இந்தியா அறிக்கைகளை வெளியிட்டு வருவதையும் அவர் கண்டித்தார்.

1947 இல் இந்தியாவும், பாகிஸ்தானும் சுதந்திரம் பெற்ற பின்னர் இருமுறை காஷ்மீர் தொடர்பாக யுத்தத்தில் ஈடுபட்டன. (ஐ)

விமானம் விபத்தில்

கொழும்பு, மார்ச் 9

யாழ். — கொழும்புசேவையில் ஈடுபட்டிருந்த தனியார் நிறுவனம் ஒன்றின் விமானம் ஒன்று கடந்த வியாழனன்று பிற்பகல் 12–30 மணியளவில் இரத்மலானையில் தரையிறங்கிய சமயம் அதன் இயந்திரத்தில் சிறிய அளவில் தீப் பிடித்ததாகத் தெரிய வருகின்றது. விமான ஓடு பாதையை அண்டியிருந்த புற்றரைப் பகுதியிலும் தீப் பிடித்தது. எனினும் விமானி துரிதமாகச் செயற்பட்டு விமானத்தில் ஏற்பட்ட தீயையும், விமானத்தையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விமானப்படை டிரக்டர்கள் விமானத்தை கட்டி இழுத்து பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு வந்ததும் விமானத்திலிருந்த பயணிகள் இறக்கப்பட்டனர்.

விபத்துக்கான காரணம் தெரியவில்லை எனினும் சம்பந்தப்பட்ட விமானம் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதற்காக சேவையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையற்ற விமர்சனங்களைத் தவிர்த்து

பேராபத்திலிருந்து நாட்டை காக்க ஆதரவு தாருங்கள்

ஜனாதிபதி வேண்டுகோள்

கொழும்பு, மார்ச் 9

''பேராபத்திலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான பகீரதப் பிரயத்தனங்களை அரசாங்கம் மேற்கொண்டுள்ள இத்தருணத்தில் மகா சங்கத்தினரும், ஐக்கிய தேசியக் கட்சி உட்பட எதிர்க்கட்சியினரும் தேவையற்ற விமர்சனங்களைச் செய்து கொண்டிராமல் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.''

மேற்கண்டவாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கண்டி போகம்பரை மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பகிரங்க வேண்டுகோள் விடுத்தார்.

போருக்காக வருடம் ஒன்றுக்குப் பெருந் தொகைப் பணம் செலவிடப்படுகிறது. இந்தப் பணம் மீதப்படுத்தப் படுமானால் நாட்டின் அபிவிருத்தி எவ்வளவு தூரம் முன்னேறும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எது எப்படி இருந்தாலும் இவ்வருட இறுதிக்குள் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து அரசியல் தீர்வுக்கான சகல நடவடிக்கைகளையும் எனது அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

விஜயபால மெண்டிஸ் செய்த பஸ் ஊழல் காரணமாக மக்கள் வங்கி ஆயிரம் கோடி ரூபாவை இழந்துவிட்டது. இந்த ஊழல் இன்னமும் விசாரிக்கப்படவில்லை. தேசத்துரோகம் செய்த ஒருவரைப் பாதுகாக்க ஐ. தே. கவினர் பாடுபட்டு வருகின்றனர்.

விஜயபால மெண்டிஸின் குடியியல் உரிமையைப் பறிப்பது தொடர்பாக நாடாளுமன்ற விவாதம் நடந்தாலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றாக வேண்டும். அது கிட்டுமா என்பது சந்தேகமே?

எப்பாவலை சம்பவம் குறித்து விசாரணை நடத்துமாறு பாதுகாப்புப் பகுதிக்கு உத்தரவிட்டுள்ளேன். யார் தவறு செய்திருந்தாலும் தண்டிக்க தயங்கமாட்டேன்.

மகா சங்கத்தினரில் ஒரு சிலர் எமது முயற்சிகளுக்கு எதிராக குரல் கொடுக்கின்றனர். அனறுநாடு பேரழிவை நோக்கிச் சென்ற போது இவர்கள் எங்கிருந்தனர் என்று கேட்க விரும்புகின்றேன்.

புதிய கல்வித் திட்டம்

எனது அரசு எடுத்துள்ள அடுத்த நடவடிக்கை புதிய கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாகும்.

பிரச்சினைகளுக்குத் தீர்வு கொலை செய்வதே என்ற எண்ணம் எமது இளம் சந்ததியினரின் உள்ளங்களில் பதிய வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பேரழிவில் இருந்து இளைய சந்ததியை மீட்டாக வேண்டும். அதற்காகவே புதிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்த உள்ளோம்.

பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்க போன்றோர் கொடுத்த பணத்தினைக் கொண்டே புலிகள் தலதா மாளிகை குண்டுத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்த உண்மைகள் தெரிந்திருந்தும் கூடமாதுளுவாவே சோவித போன்ற பிக்குகள் சிலர் வாய் திறப்பதில்லை. பதிலாக அரசுக்கு எதிராக கூக்குரலிடுகின்றனர்.

இன்னும் சிறிய நிதி வசதியும் இராணுவத்தினரும் இருந்திருந்தால் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்திருப்பேன். அந்தளவு நிதிவளமும் பாதுகாப்பு வளமும் நம்மிடம் கிடையாது. வருடா வருடம் திட்டமிட்ட அளவிலேயே நிதி ஒதுக்க வேண்டியுள்ளது. இதைவிட எதனையும் என்னால் இன்றைய சூழ்நிலையில் செய்ய முடியாது.

மக்களின் எதிர்பார்ப்புக்கள் முழுமையாக நிறைவேறவில்லை என்பதை ஏற்றுக் கொள்கிறேன்.

இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வுகாணப்பட வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்று. அதற்கு முழுமையான திட்டம் தயாரித்துள்ளோம். அதற்கு நாட்டு மக்கள்அனைவரதும் முழுமையான ஒத்துழைப்பும் ஆதரவும்தேவை.

யுத்தத்தை இவ்வருட இறுதிக்குள் முடிவுக்குக் கொண்டு வருவோம். அதன் பின்னர் அரசியல் ரீதியிலான தீர்வு காணப்படும். இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை மக்கள் நம்பிக்கையுடனும் உரிமையுடனும் தலைநிமிர்ந்து வாழும் நிலையை நாம் ஏற்படுத்திக் கொடுத்தே ஆக வேண்டும். ஜனநாயகத்தின் பேரால் அதனை நான் மிக விரைவில் செய்திடுவேன்.

இப்படி ஜனாதிபதி கூறினார். (இ-10)

தம்பலகமம் படுகொலை சார்ஜன் தலைமறைவு

கடந்த ஜனவரி 31ஆம் திகதி திருகோணமலை மாவட்டத்திலுள்ள தம்பலகமம் பகுதியில் 8 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகிக்கப்படும் பொலீஸ் சார்ஜன் மஞ்சுல தலைமறைவாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பல மாதங்களுக்கு முன்னர் ஊர்காவற்படை வீரராகப் பணியாற்றிய போது மறைந்திருந்து தாக்கி 5 விடுதலைப் புலிகளைக் கொன்றதற்காக இவருக்கு 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபா சன்மானமும் நிரந்தர பொலீஸ் சேவையில் பதவி உயர்வும் கிடைத்தன.

அதன் பின்னர் 40 ஊர்காவற்படையினரைக் கொண்ட குழுவிற்குத் தலைவராக நியமிக்கப்பட்ட இவருக்கு பொலீஸ் சார்ஜன் பதவியும் வழங்கப்பட்டது.

சார்ஜன் மஞ்சுல மேலும் சன்மானங்களையும், பதவி உயர்வுகளையும் பெறும் நோக்கிலேயே ஜனவரி 31ஆம் திகதி தம்பலகமம் பகுதியில் பொலீஸாருக்கிடையே போலியான மோதலை ஏற்படுத்தி அப்பாவித் தமிழ் மக்களைப் படுகொலை செய்யத் திட்டமிட்டார் என தற்போது தெரியவந்துள்ளது.

ஏற்கனவே அவர் பெற்ற சன்மானங்கள் மற்றும் பதவி உயர்வுகளுக்காக அவர் புரிந்த படுகொலைகள் பற்றிய தகவல்களும் வெளிவந்துள்ளன.

புலிகளுடன் ஏற்பட்ட மோதல் எனத் தெரிவிக்கப்பட்ட பொலீஸாருக்கிடையேயான போலி மோதலின் போது பயன்படுத்தியதாகப் தெரிவிக்கப்பட்ட ரவைகளில் பெருந்தொகையானவை விற்பதற்குத் தயாராக வைக்கப்பட்டிருந்தன எனவும் அவற்றுடன் மோட்டார்களும் இருந்தன எனவும் தெரிய வந்துள்ளது. இந்த வியாபாரத்தில் பொலீஸ் உயர் அதிகாரிகளுக்கும் தொடர்புகள் இருந்தன எனவும் தெரிவிக்கப் படுகிறது. (இ-10)

தரமான முறையில்
குறைந்த கட்டணத்தில்

▶ போட்டோ பிரதிகள்
▶ லமினேட்டிங் (கவரிடுதல்)

நாடவேண்டிய இடம்:

அருண்

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09-03-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்)

படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று நண்பகல் மோதல் ஒன்று இடம் பெற்றது.

சேதவிவரம் தெரிய வரவில்லை.

குடத்தனைப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற ஒருசம்பவத்தையடுத்து, அப்பகுதிக்கு ரோந்து சென்ற படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சண்டை இடம் பெற்றதாகவும்—

சண்டையில் ஏற்பட்ட சேதவிவரம் தெரிய வரவில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டது.

நேற்றிரவு 10 மணியளவில் குருநகர் கடற் கரைப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும்இடையில் மோதல் இடம்பெற்றதாகவும் —

சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதி நோக்கி ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. (இ-3)

ஜெயலலிதா...

(முதலாம் பக்கத் தொடர்)

சுக்களை நடத்துவார்.

புதிய பிரதமரின் பதவிப் பிரதமாணம் நடைபெறும் வரை அவர் புதுடில்லியிலேயே தங்கியிருப்பார் என செய்திகள் தெரிவிக்கின்றன.

அதே சமயம் பாரதீய ஜனதாக் கட்சியும், காங்கிரஸும் ஆட்சி அமைப்பதற்காக தமக்குரிய ஆதரவைத் திரட்டுவதற்கு முயற்சிகள் எடுத்து வருகின்றன.

ஆட்சி அமைப்பதற்கு பாரதீய ஜனதாக் கட்சிக்கே கூடுதல் வாய்ப்புகள் இருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். (இ-9)

தமிழ் இளைஞன் தாக்கப்பட்டபோது குரல் கொடுத்த சிங்கள இளைஞன்

கொழும்பு, மார்ச் 9

மருதானையில் குண்டு வெடிப்புச்சம்பவம் இடம் பெற்று சில மணி நேரத்தில் தம்மை இராணும் எனக் கூறிய ஒருவர் தமிழ் இளைஞர் ஒருவரைப் பிடித்து கன்னத்தில் அறைந்தார். பொதுமக்கள் தலையிட்டதால் அந்தத் தமிழ் இளைஞர் தப்பித்துக் கொண்டார்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்று ஒரு சில மணி நேரத்தில் புறக்கோட்டை ஒல்கொட் மாவத்தையில் வந்து கொண்டிருந்த இளைஞர் ஒருவரின் சேர்ட் கொலரைப் பிடித்து இன்னும் ஒருவர் இழுத்துக் கொண்டு வந்தார்.

இச்சம்பவத்தை அவதானித்த பாதசாரிகளும், நடைபாதை வியாபாரிகளும் அந்த இடத்தைச் சூழ்ந்து கொண்டனர்.

இளைஞரை இழுத்து வந்தவர் தாம் 'ஆமி' என்றும் இழுத்து வரப்பட்டவர் புலிச் சத்தேக நபர் எனவும் கூறி அவரை தாக்கினார்.

அச்சமயம் கூட்டத்தை விலக்கிக் கொண்டு வந்த சிங்கள இளைஞர் ஒருவர் உனக்கு அடிக்க உரிமை இல்லை. தேவையென்றால் பொலீஸில் ஒப்படைத்து விடு எனக் கத்தினார்.

அங்கு கூடியிருந்த மக்களும் இராணுவத்தின் பெயரை நீ சீரழிக்கின்றாய் எனச் சத்தமிட்டனர்.

இதனால் 'ஆமி' எனச் சொன்னவர் அந்தத்தமிழ் இளைஞர் மீதான தமது பிடியைத் தளர்த்தினார்.

அங்கு கூடியிருந்தவர்களின் பரிதாபங்களுக்கு மத்தியில் தம்மை 'ஆமி' என்று கூறிய அந்த நபர் அங்கிருந்து நழுவிச் சென்றார்.

அப்பாவித் தமிழ் இளைஞன் தாக்கப்பட்டபோது மனிதாபிமானத்துக்காக குரல் கொடுத்த அந்த சிங்கள இளைஞன் ஒரு நடைபாதை வியாபாரி என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-9-10)

நான்கு சிற்றூழியர்களின் இடமாற்ற உத்தரவு ரத்து

யாழ்ப்பாணம், மார்ச் 9

கோப்பாய் அரசினர் பயிற்சிக் கலாசாலையில் பணியாற்றிய நான்கு சிற்றூழியர்களையும்இடமாற்றம் செய்த வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளரின் உத்தரவை உயர்கல்வி, கல்வி அமைச்சு சிரேஷ்ட உதவிச் செயலாளர் ரத்துச் செய்துள்ளார்.

நான்கு சிற்றூழியர்களை இடமாற்றம் செய்த விடயம் குறித்து கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை அதிபர் அவரின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து மேற்கண்ட உத்தரவை சிரேஷ்ட உதவிச் செயலாளர் பிறப்பித்துள்ளார்.

இடமாற்ற உத்தரவு கிடைத்தும் புதிய இடங்களுக்கு செல்லாமல் தொடர்ந்து கலாசாலையில் பணியாற்றிய அந்த நான்கு ஊழியர்களுக்கான சம்பளத்தையும் நிலுவையுடன் வழங்குமாறும் அவர் வலயம் ஒன்று பணிப்பாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த நான்கு ஊழியர்களும் இடமாற்றம் பெற்ற புதிய இடங்களுக்கு செல்லாததால் வலயம் ஒன்றுப் பணிப்பாளர் அவர்களின் சம்பளத்தை நிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வேலையற்ற இளைஞருக்கு தொழில் முயற்சி பயிற்சி

வேலையற்ற இளைஞர்களுக்கான தொழில் முயற்சி பயிற்சி நெறி ஒன்றை கைத்தொழில் அபிவிருத்திச் சபை விரைவில் நடத்தவுள்ளது.

இந்தப் பயிற்சியாளர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை தற்பொழுது நடைபெற்று வருகிறது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் இருந்து பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளார்கள்.

தொலைக்காட்சி திருத்துதல், அன்ரனா பழுது பார்த்தல், பற்றறி சார்ச் உட்பட பல துறைகளிலும் இப்பயிற்சி நெறி வழங்கப்படும் என்று கைத்தொழில் அபிவிருத்திச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-5)

4 புலிகள் உயிரிழப்பு என அறிவிப்பு

கொழும்பு, மார்ச். 9

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள துருப்பினர் ஒலுமடுவுக்கு தென் – மேற்கே நேற்று முன்தினம் மேற்கொண்ட தாக்குதலில் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த நால்வர் உயிரிழந்தனர் எனறுபாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன (இ-3)

கலந்துரையாடல்

குருநகர், மார்ச் 9

றெக்கிளமேசன் பகுதியில் மேற்கொள்ளப்பட உள்ள குடிதண்ணீர் விநியோகம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை காலை 9-00 மணி அளவில் றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் ஜேர்மன் தொழில்நுட்ப அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொள்ள உள்ளார்கள். (இ-51)

பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

திகதி கொழும்பில் நடைபெறும்.

படை அதிகாரிகளும், அரச அதிகாரிகளும் கலந்து கொள்வர். (இ-3)

யுத்தத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்த முயற்சிக்கு எதிர்க்கட்சி ஆதரவு தராவிட்டால் வேறு வழிகளில் இத்திட்டம் அமுல் செய்யப்படும்.

அரசமைப்பு கடவுளால் வழங்கப்படவில்லை. பெரும்பான்மையான மக்கள் அது மாற்றப்பட வேண்டும் என விரும்பினால் அதனை மாற்றுவதில் எந்தவிதமான தவறும் இல்லை.

விடுதலைப் புலிகளை முறியடிக்க படையினர் தீவிரமாகப் போராடி வருகின்றார்கள். இந்த யுத்தத்துக்கு விரைவில் முற்றுப் புள்ளி வைக்கப்படும். இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணப்படும். இதன் பின்னர்சகல சமூகங்களும் ஒற்றுமையாக வாழக் கூடிய சூழ்நிலையை உருவாக்குவதில் பாடசாலைகளினதும், பெண்களினதும் பங்கு மகத்தானது.

இப்படி அவர் கூறினர். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org